
# ஆசார்ய ஹ்ருதயம்




திருக்கண்ணபுரம் சடகோபாச்சாரியார்
தொகுத்தது

# ஆசார்ய ஹ்ருதயம்

ஆழ்வார்களில் தலைவராகக் கருதப்படும் நம்மாழ்வார். குரு பரம்பரையிலும் ஆசார்யர்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார். அவர் ப்ரபந்தங்களில் முக்கியமாக திருவாய்மொழியில் ஆழ்வாருடைய உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதற்காக அவதரித்தது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசார்ய ஹ்ருதயம் என்ற நூல்.

வடமொழியில் மட்டுமே முன்னர் காணப்பட்ட வேதாந்தக் கருத்துக்களை எளிதாகத் தமிழில் அறிய முடியும் என்பதால் திருவாய்மொழியை த்ராவிட வேதம் என்று சொல்கிறோம். ஆழ்வார் நான்காவது வர்ணத்தில் பிறந்திருந்தாலும் வேதாந்த தத்துவங்களை தெளிவு படுத்துவது அவர் எம்பெருமானால் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவராதலால் என்கிறார். நாயனார் தமிழில் இருந்தபோதிலும் இவற்றின் தெய்வத்தன்மைக்குக் குறைவில்லை என்றும் காட்டி, ஆழ்வாரின் பெண் தன்மைப் பாசுரங்கள், ஆழ்வாரின் திவ்யதேச அனுபவம், ஆகியவற்றையும் நாயனார் விரிவாகச் சொல்கிறார். திருவாய் மொழியை பலபடியாக அனுவிக்கலாம் என்பதை இந்தப் ப்ரபந்தம் கண்ணனின் கீதைக்கு ஸமம் என்றும், த்வயார்த்தம் சொல்லுகிறது என்றும், அர்த்த பஞ்சகம் சொல்லுகிறது என்றும் எம்பெருமானின் பத்து குணங்களை பத்து பத்துகளிலும் காட்டுகிறார் என்றும் கூறி கடையில், ஒவ்வொரு பத்திலும் ஆழ்வாருக்கு எம்பெருமான் பண்ணின பேருபகாரமும், ஸம்ஸாரிகளுக்கு ஆழ்வார் செய்யும் உபதேசமும் ஆக இந்த நூல் அமைந்திருக்கிறது.

பராங்குச நாயகி

# ஆசார்ய ஹ்ருதயம்

திருக்கண்ணபுரம் சடகோபாச்சாரியார்
தொகுத்தது

விலை

அட்டையில்

நம்மாழ்வார் நாச்சியார் திருக்கோலம்
ஸ்ரீரங்கம் இராப்பத்து ஏழாம் திருநாளில்
ஆழ்வார் ஸேவை ஸாதிக்கிறபடி

# முன்னுரை

ஸ்ரீ அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயம் அற்புதமான க்ரந்தம். பெரும்பாலும் அருளிச் செயல்களில் உள்ள சொற்களைக் கொண்டே இதன் ஸூத்ரங்கள் அமைந்திருக்கின்றன. இதற்கு விசதவாக் சிகாமணிகளான மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் மிக அழகாக அமைந்திருக்கிறது. இவையிரண்டும் சேர்ந்து காலக்ஷேபமுறையில் கேட்டாலொழிய புரிந்துகொள்வது சிரமமே. அடியேன் ஸ்ரீரங்கம் கோயில் வித்வான் ஸ்ரீ உ.வே. நரஸிம்மாசாரியார் ஸ்வாமியிடம் காலக்ஷேபம் கேட்டு அறிந்ததைக் கொண்டு இந்த சிறிய நூலை தொகுத்திருக் கிறேன். ஆசார்யஹ்ருதயத்தின் ஒரு பகுதியான ஆழ்வாரின் பெண் தன்மையை விளக்கும் ஸூத்ரங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கின்றன. காலக்ஷேபமாக கேட்க வாய்ப்பில்லாத வர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இதில் குறைகளிருந்தால் அது அடியேனுடைய ஜ்ஞானக் குறைவினால் ஏற்பட்டவை.

இதைப் படிப்பதால், மூலக்ரந்தத்தின் மற்ற பகுதிகளையும் படிக்க வேண்டும் என்று ஆவல் உண்டாகும் என்று நம்புகிறேன்.

தாஸன்
திருக்கண்ணபுரம் சடகோபன்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

# பராங்குச நாயகி

நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கு. அவையாவன (1) திருவிருத்தம் (2 திருவாசிரியம் (3) பெரிய திருவந்தாதி (4)திருவாய்மொழி . இந்த நான்கும் நான்கு வேதங்களின் ஸாரம் என்பது பூர்வாசாரியர்கள் கருத்து. திருவாய்மொழியை ஸாமவேத ஸாரம் என்று சொல்வார்கள்.

ஆழ்வார் அவதரித்தது முதலாக உலகவாழ்க்கையிலிருந்து விலகியே யிருந்து பின்னர் இந்தப் ப்ரபந்தங்களை அருளிச்செய்தார் அவருடைய முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தின் முதல் பாசுரத்திலேயே பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாமுறாமை தரவேணுமென்று எம் பெருமானிடம் விண்ணப்பிக்கிறார். அப்படியிருக்க பல பாசுரங்கள் ஆழ்வார் பெண்தன்மையயடைந்த நிலையில் பகவதனுவபம் பெறாமல் தாம் படும் பிரிவுத்துயரை லௌகிகமான முறையில் ஒரு நாயகி நாயகனைப் பிரிந்து படும் நிலையாகப் பாசுரம் பாடும் காரணம் என்ன என்று எண்ணக்கூடும்.

தமிழ் இலக்கியத்தில் அகத்துறை இலக்கியம் என்பது நாயகன் நாயகி கலத்தல் பிரிதல் முதலிய அவர்களுக்கு ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகைகளைச் சொல்கிறது. இந்தத் துறைக்கு இலக்கணம் என முக்கிய நூல்களாவன இறையனார் அகப்பொருள் நம்பிஅகப்பொருள் என்ற இரண்டும். ஆழ்வாருடைய பெண் பேச்சாக வருகிற பாசுரங்கள் இந்த நூல்களில் சொல்லப்பட்ட முறைகளிலேயே அமைந்திருக்கின்றன.

இதற்குக் காரணத்தை ஸ்ரீவேதாந்த தேசிகன் भक्ति: शृगंरबृत्या परिणमति பக்தி சிருங்காரமாக மாறுகிறது என்று சொல்கிறார்.

ப்ரபந்தங்களுக்கு வியாக்கியானம் அருளிச் செய்த நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை ஆகியோர் இந்த நிலைக்கான காரணத்தை ஆராய்ந்திருக்கிறார்கள்.

1) எம்பெருமான் ஒருவனே புருஷோத்தமன் மற்ற ஆத்மாக்கள் எல்லாம் பெண்களே स्त्रीप्रायं इतरत् ஆகையால் பெண்தன்மை இயற்கையானதே என்கிறார்கள்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் தம்முடைய ஆசார்ய-ஹ்ருதயத்தில்'வித்யை தாயாகப்பெற்று' (ஸூத்ரம் 121) என்று தொடங்கும் ஸூத்ரத்தில் ஒரு பெண் மணந்து கொண்டு தன் பர்த்தாவுடன் புக்ககம் செல்வதைப்போன்றது ஒரு ஜீவாத்மா பகவத் பக்தி முற்றி முடிவில் எம்பெருமானுடன் சேர்வது என்பதாகக்காட்டி ஆதலால் ஆழ்வாருக்கு பெண் பேச்சு ஸ்வாபாவிகமானது என்ற கருத்தை "மணிவல்லிப் பேச்சு வந்தேறியன்று" என்று முடித் திருக்கிறார்.

பிள்ளை லோகாசாரியார் தம்முடைய அஷ்டாதச ரஹஸ்யங்களில் ஒன்றான நவவித ஸம்பந்தம் என்ற நூலிலும் எம்பெருமானுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தம் பிரிக்கமுடியாதது என்று சொல்லி ஒன்பதுவிதமான ஸம்பந்தங்களைச் சொல்லுமிடத்தில் பர்த்ருபார்யா ஸம்பந்தத்தையும் சொல்கிறார்.

ஆழ்வார்களில் பெரியாழ்வார் தன்னை யசோதைப் பிராட்டியாக பாவித்துக் கொண்டு கண்ணனின் பால லீலைகளை அனுபவித்தார். குலசேகராழ்வார் பெற்றும் பெறாதவளான தேவகி இழந்த அனுபவத்தைப் பாசுரமாகச் செய்தார். ஆண்டாளோ இயல்பினாலேயே பெண் ஆனதால் அவள் பாசுரங்களும் ஸ்வாபாவிகமாக ஆயிற்று.

திருமங்கை ஆழ்வாரும் நம்மாழ்வாரும் தலைமகளாகவும் தாயாகவும் பாடல்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். திருமங்கை ஆழ்வாருடைய இரண்டு திருமடல்களும் முழுமையாகப் பெண் பாசுரங்கள் திரு

நெடுந்தாண்டகத்தில் எட்டு தலைமகள் பாசுரங்களாகவும் 10 பாசுரங்கள் தாய் பேச்சாகவும் அமைந்திருக்கின்றன. இவர் தலைமகள் நிலையில் ஒரு பதிகம் ஊடலாக அருளிச் செய்தார். பெரிய திருமொழியிலும் 24 திருமொழிகள் தாய் நிலையிலும் தலைமகள் நிலையிலும் அருளியவை. சில பதிகங்கள் யசோதை ஆய்ச்சியர் இவர்கள் நிலையிலும் அருளியவை. இவர் பாடல்களில் தோழிப் பாசுரங்கள் இல்லாவிட்டாலும் தலைமகள் தோழியிடம் சொல்லுவதுபோல் அமைந்திருக்கின்றன.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் முதல்வதும் கடைசியானதுமான பாடல்கள் தவிர மற்றவை பெண் நிலையிலேயே அமைந்திருக்கின்றன.

இப்படியானால் இந்தப்பெண்தன்மை ஆழ்வாருக்கு எவ்வாறு ஏற்படுகிறது என்பதற்கு நாயனார் சொல்கிறார்.

*ஞானத்தில் தன் பேச்சு ப்ரேமத்தில் பெண் பேச்சு (ஸூ 1.48)*

அதாவது ஞானநிலையில் தாமான தன்மையிலே நின்று பேசுவார். அன்பு நிலையில் பெண்பேச்சாகப் பேசுவார் என்றபடி.

ஆழ்வாருக்கு எம்பெருமானிடம் ப்ரேமம் எப்பொழுதுமிருக்க எவ்வாறு தானானதன்மையும் பெண்பேச்சும் மாறிவருகின்றது என்றால் பகவதனுபவத்தைப்பெற்று அதில் ஆனந்தித்திருக்கும் போது இடையே எம்பெருமான் விலகிப்போக ஆழ்வார் கலந்து பிரிந்த நாயகியின் நிலையை அடைகிறார். பிறகு பாசுரம் பெண் பேச்சாக வருகிறது. ஸம்ஶ்லேஷம் விஶ்லேஷம் (கலத்தல் பிரிதல்) முதலிய நிலைகள் நாயகன் நாயகி கலத்தலையும் பிரிவையும் சொல்லுவன அல்ல. இதை விளக்குகிறார் நாயனார்.

ஸம்ஶ்லேஷமாவது தரிசனஸமமான மானஸ அனுஸந்தானமும் விஶ்லேஷமாவது மனச்சைதில்யமும் (ஸூ.116) அதாவது நேரே கண்ணால் காண்பது போன்ற தெளிவான மனத்தின் அனுபவமும் அந்த அனுபவம் விலகியதால் ஏற்பட்ட மனத்தளர்ச்சியும்.

இப்படி பகவதனுபவம் மானஸீகமாகப்பெற்றும் இழந்தும் இவர் மாறி மாறி அடைகிற நிலைகளை முறையே தன் பேச்சாகவும் பெண் பேச்சாகவும் ஆழ்வார் வெளிபடுத்துகிறார்.

ஆழ்வார் நாயகி வாயிலாக மட்டும் இல்லாமல் தோழி பேச்சாகவும் தாயார் பேச்சாகவும் சில திருவாய்மொழிகளை அருளிச் செய்கிறார். பெண் பேச்சிலேயே வேறு வேறு முறைக்குக்காரணம் என்ன என்பதையும் நாயனார் வெளிப்படுத்துகிறார்.

நம்ஸம்ப்ரதாயத்தில் ஜீவாத்மா எம்பெருமானுக்கே சேஷம் தனக்கோ பிறருக்கோ சேஷமல்ல என்பது மிக முக்கியமானது.

இரண்டாவதாக பகவதனுபவப்ராப்தி இரண்டு விதமாக பெறலாம். ஸ்வகதஸ்வீகாரம் என்றும் பரகதஸ்வீகாரமென்றும். பகவத் ப்ராப்திக்காகத் தன் முயற்சி என்பது ஸ்வரூப விரோதம். எம்பெருமான் தானே வந்து கைக்கொள்ளுவான். நம்மிடத்தில் ஆகிஞ்சன்யமும் அனன்யகதித்வமும் விலக்காமையுமே வேண்டுவது. (உபாயாந்தரங்களை விடுவதற்கு அஜ்ஞான அசக்திகளன்று ஸ்வரூப விரோதமே ஹேது முமுக்ஷுப்படி சாமஸ்லோகப்பரகரணம்).

ஆனால் ஆழ்வாருடைய பகவத்ப்ராப்திக்கான துடிப்பால் "கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ" என்பது போல் பல இடங்களில் பேசுகிறார். அவன் ஸ்வீகரிக்கும் வரையில் பொறுத்திருப்பதே சேதனனுடைய லக்ஷணமாயிருக்க இப்படிப் பாடுவதேன் என்றால் அதற்கு ஆழ்வாருடைய த்வரை, சீக்கிரம் அடைய வேண்டும் என்ற பதற்றம் தான் காரணம்.

இந்த மூன்று விஷயங்களையும் ஆழ்வாருடைய மூன்று விதமான பெண் தன்மைகளுக்குக் காரணம் என்கிறார் நாயனார்.

> ஸம்பந்த உபாய பலங்களில் உணர்த்தி துணிவு, பதற்றம் ஆகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்கு தோழி தாயார் மகள் என்று பேர்.
>
> (ஸூ 133).

இந்த ஸூத்ரத்தை ஸம்பந்தத்தில் உணர்த்தி உபாயத்தில் துணிவு பலத்தில் பதற்றம் ஆகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்கு முறையே தோழி தாயார் மகள் என்ற பேர் என்று மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஸம்பந்தமாவது ஈசுவரனுக்கும் சேதனனுக்கும் உள்ள ஸம்பந்தமான சேஷி சேஷ பாவம். அதாவது அனன்யார்ஹத்வம். அதாவது ஈசுவரனைத் தவிர தனக்கும் பிறர்க்கும் உரியவனல்லன் என்பது.

உபாயமாவது பகவத்ப்ராப்திக்கு உபாயமாக சொல்லப்படுகிற கர்ம ஞான பக்தி ஆகிற உபாயங்கள். எம்பெருமானே ஸித்தோபாயம். அதாவது தப்பாத உபாயம். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட உபாயானுஷ்டானங்களாலும் முடிவில் அவன் கருத்துக்கு இசைவாகவே பலம் கிட்டும் என்று சாஸ்திரமே சொல்லுகிறது.

यमेवैष वृणुते तेन लभ्य:(எவரை அவன் வரிக்கிறானோ அவராலேயே அடையத்தக்கவன்). பலமாவது பகவத்ப்ராப்தி.

ஆக சேதனனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள ஸம்பந்தம் சேஷ சேஷிபாவம். எம்பெருமானுக்கே சேதனன் உரியவன் என்கிற உணர்த்தி அதாவது ஸம்பந்தஞானம் தோழி பேச்சாக ஆழ்வாரிடமிருந்து வருகிறது.

எம்பெருமானே நம்மை கைக்கொள்வான் என்ற உறுதி - துணிவு வேண்டும் என்று தாயார் பாசுரங்களாக ஆழ்வாரிடமிருந்து வெளிப்படுகின்றன.

பகவத் ப்ராப்தியாகிற பலம் எப்பொழுது கிட்டும் என்கிற பதற்றம்-த்வரை, மகள் அதாவது நாயகி பாசுரங்களாகக் காண்கிறோம்.

இப்படி இந்த மூன்று நிலைகளிலான ஆழ்வார் பாசுரங்களை ஆசார்யஹ்ருதயம் தொகுத்தளிக்கிறது.

"ஸகிவெறிவிலக்கி ஆசையறுத்து, அறத்தொடு நின்ற மூன்றில் அநந்யார்ஹத்வமும், வாடி, மெலிந்து, பித்தேறி, ஏறப்பேசி, கட்டிழந்து, அகன்று சார்வதே வலித்தமை சாதனமாமோ என்று மாதா அஞ்சிமுறைப்பட்டு முறையிடுகிற ஏழில் அத்யவ வஸாயமும், புத்திரிபலகால் ஆள்விட்டு, ஆற்றாமை சொல்லி, கவராதவை விட்டு, இரைக்க மடலெடுத்து, கண்புதையப் போக்கற்று, உருநெஞ்சுள் எழ,

கூடுநாள் தேடித், தாழ்ந்ததுக்கு ஊடி, உசாத்துணையற்று, சூழவும் பகைமுகம் செய்யத், தடை நில்லாதே, புயக்கற்று, மாலையும், காலையும் பூசலிடுகிற பதினேழில் த்வரையும் தெரியும்'. (ஸூ 134).

ஆக தோழி பாசுரமாக மூன்றும், தாய்ப்பாசுரமாக ஏழும் மகள் பாசுரமாக பதினேழும் என்று 27 திருவாய்மொழிகள் பெண் பேச்சாக அமைந்திருக்கின்றன.

இதில் முதலில் தோழிப்பாசுரங்களைப் பார்ப்போம். இந்த மூன்று திருவாய்மொழிகளாவன (1) தீர்ப்பாரையாமினி (4-6) ((2) துவளில் மாமணி (6-5) (3) கருமாணிக்கமலை (8-9).

அகத்துறை இலக்கியத்தில் தோழி தாயார் ஆகியவர்களின் பங்குபற்றி விளக்கப்படுகிறது. தோழி தலைமகளுக்கு மிகவும் அந்தரங்கமானவள். தலைவனும் தலைவியும் அகஸ்மாத்தாக சந்தித்துக் காதல் கொள்ளுகிறார்கள். இது தோழி அறிகிறாள். தக்க ஸமயத்தில் தாயாரிடம் தலைவியின் உள்ளக்கிடக்கையை தெரிவித்து தோழியின் விருப்பத்தை நிறைவேறச் செய்வது தோழியின் வேலை.

தலைவனை சந்தித்து அவனிடம் காதல் கொண்ட தலைவி (பராங்குச நாயகி) பின்பு அவனைப் பிரிந்து வருந்துகிறாள். எதிலும் உற்சாகமின்றி இருப்பதை பார்த்து, தாயார் இந்தப் பெண்ணுக்கு ஏதாகிலும் பேய்பிடித்து இருக்குமோ என்று வெறியாடுபவனைக் கூப்பிட்டு இவள் நோய் என்னவென்று கண்டுசொல்லச் சொல்லுகிறாள்.

அப்பொழுது தோழி குறுக்கிட்டு குறிசொல்பவளோ வெறியாடு பவளோ கண்டு சொல்லக்கூடியது அல்ல இவள் நோய். இவளை ஆட்கொண்டவன் எம்பெருமானாகிய பெருந்தெய்வம் என்று சொல்லுகிறாள்.

**ஸகி வெறிவிலக்கி**

*தீர்ப்பாரையாமினி எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்*
*ஓர்ப்பாலிவ்வொண்ணுதல் உற்ற நல்நோயிது தேறினோம்*

*போர்ப்பாகுதான் செய்து அன்றைவரைவெல்வித்த மாய போர்த்*
*தேர்ப்பாகனார்க்கு இவள் சிந்தை துழாய்த்*
*திசைக்கின்றதே.* (4-6-1)

தாய்மார்களே இவள் நோய் பற்றி அறிய இவர்களை ஏன் நாடுகிறீர்கள். இந்த அழகிய நெற்றியையுடையவளின் நோய் சிறந்தது என்று நான் ஊகித்தறிகிறேன். முன்னொரு சமயம் போரை நடத்தி பாண்டவர்களை வெற்றியடைய செய்த தேரோட்டியாய் வந்தவன் இவள் சிந்தையை கலங்கச்செய்திருக்கிறான் என்றும் தோழி சொல்ல

ஆனால் இந்நோய்க்கு என்ன மருந்து என்று தாயார் வினவ

இது காண்மின் அன்னைமீர் இக்கட்டுவிச்சி சொற்கொண்டு
எதுவானும் செய்து அங்கோர்கள்ளுமிறைச்சியும் தூவேன்மின்
மதுவார் துழாய் முடி மாயப்பிரான் கழல் வாழ்த்தினால்
அதுவே இவளுற்ற நோய்க்கும் அருமருந்தாகுமே (4-6-3 )

அன்னைமீர் நீங்கள் இந்த குறிசொல்லுபவள் பேச்சைக் கேட்டு க்ஷுத்ர தேவதைகளுக்குச் செய்வது போல் கள்ளும் இறைச்சியும் இறைக்காதீர்கள். தேன் பெருகும் திருத்துழாய் மாலையை முடியில் தரித்திருக்கும் அப்பெருமானின் திருவடிகளைப் புகழ்ந்து பாடினால் அதுவே இவளுடைய நோய்க்குச் சிறந்த மருந்தாகும் என்றும்

ஒருங்காகவே உலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவன்
பேர் சொல்லகிற்கில் இவளைப்பெறுதிரே (4.6.4).

ப்ரளய காலத்தில் அனைத்துலகையும் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்து பிறகு மீண்டும் முன்பு போலவே சிருஷ்டித்த எம்பெருமான் பெயரைச் சொல்லி இவள் உடலில் வெண்பொடி கொண்டு பூசுங்கள் என்றும்

மணியின் அணிநிற மாயன் தமரடி நீறு கொண்டு
அணியமுயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே (4.6.5)

நீலரத்னத்தின் நிறம் போன்ற நிறமுடைய பெருமானுடைய அடியார்கள் திருவடி தூளிகொண்டு இவள்மேல் பூசுங்கள் என்றும்

'ஏழ்மைப்பிறப்புக்கும் சேமம் இந்நோய்க்கும் ஈதேமருந்து
ஊழ்மையில் கண்ணபிரான் கழல் வாழத்துமின் உன்னித்தே'

(4.6.7)

நன்மையை உண்டாக்கும் இந்த நோய்க்கு இதுவே மருந்து. வேறு சிந்தையின்றி கண்ணன் திருவடிகளை வாழ்த்துங்கள் என்றும்

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவளையல்லால்
நும்மிச்சைசொல்லி நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர் .
மன்னப்படுமறைவாணனை வண்துவராபதி
மன்னனை ஏத்துமின் ஏத்துதலும் தொழதாடுமே (4.6.10)

ஏனென்றால் உங்க்ள மகள் வேதங்களால் காட்டப்படுகிற கண்ணபிரானை தவிர வேறு தெய்வம் தொழ மாட்டாள் அதனால் அவளைப் புகழ்ந்து பாடுங்கள் தொழுங்கள், ஆடுங்கள் என்று ஜீவாத்மாவாகிற தலைவியின் அநன்யார்ஹ சேஷத்வத்தைச் சொல்லி அவனால் ஆட்கொள்ளப்படுகிற ஆத்மாவுக்கு இதர தெய்வங்களைப் பூசித்துப்பயனில்லை என்று தோழி காட்டுகிறாள்.

இப்படி ஜீவாத்மா எம்பெருமானுக்கே சேஷம் என்றும் தேவ தாந்தரங்களை ஆச்ரயிப்பது துக்ககரமென்றும் தோழியின் பாசுரமான தீர்ப்பாரை யாமினி காட்டுகிறது.

ஆழ்வாருடைய திருவிருத்தம் ப்ரபந்தத்தின் நூறுபாட்டுக்களும் திருவாய் மொழியின் நூறுபதிகங்களின் பொருளையே சொல்கின்றன என்பது பூருவர்கள் நிர்வாஹம்.

இந்த "தீர்ப்பாரையாமினி" பதிகத்திற்கு நேரான திருவிருத்தப் பாசுரம்

சின்மொழிநோயோ கழிபெருந்தேய்வம் இந்நோய் இனதென்று
இன்மொழி கேட்குமிளந்தெய்வமன்றிது வேலநில்நீ
என்மொழி கேண்மின் என்னம்மனைமீர் உலகேழுமுண்டான்
சொல்மொழி மாலையந்தண்ணந்துழாய்கொண்டு சூட்டுமினே

(திருவிருத்தம் 20)

**ஆசையறுத்து**

இந்தப்பெண்ணைப் பெற்று சீராட்டி வளர்த்தோம் இனி இவளைத் தகுந்த ஒருவருக்கு மணம் செய்து வைத்து அவள் மண வாழ்க்கையைக் கண்டு களிக்கவேண்டுமென்று ஆசையோ டிருந்தோமே இனி அது நடவாதோ என்று தாயார் வருத்தப் படுவதாக மீண்டும் தோழி பேச்சாக ஒரு திருவாய்மொழி அருளிச்செய்கிறார் ஆழ்வார்.

துவளில் மாமணிமாடமொங்கு தொலைவில்லிமங்கலம் தொழு
மிவளை நீரினி யன்னைமீர் உமக்காசையில்லை விடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத் தடங்க
ணென்றும்
குவளையொண்மலர்க் கண்கள் நீர் மல்க நின்று நின்று
குமுறுமே (6.5.1.)

தூயதான மணிமாடங்கள் சூழ்ந்த தொலைவில்லி மங்கலத் தெம்பெருமானை இவள் தொழுகிறாள். இனி இவளைப் பற்றிய ஆசைகளை அன்னைமீர் வீட்டுவிடுங்கள். இவள் இடை விடாது சங்கு சக்கரம் என்றும் தாமரையை ஒத்த அகன்ற கண்களென்றும் சொல்லிக் கொண்டு குவளைப் பூப்போன்ற கண்களில் நீர் பெருக புலம்புகிறாள்.

இவளுக்கு எவ்வாறு தொலைவில்லிமங்கலத்தெம்பெருமாளிடம் காதல் உண்டாயிற்று என்று அன்னை வினவ தோழி கூறுகிறாள்.

நீங்கள்தான் அவ்வூரில் வாத்யகோஷங்கள் நிறைந்த ஒரு விழாக்காலத்தில் அவளை அழைத்து சென்றீர். இப்பொழுது அவள் தேவ தேவபிரானென்று கண்கள் நீர் மல்க நிற்கிறாள்.

குமுறுமோசைவிழவொலித் தொலைவில்லிமங்கலம் கொண்டு
புக்கு
அமுத மென்மொழியாளை நீருமக்கு ஆசையின்றியகற்றினீர்
திமிர் கொண்டாலொத்து நிற்கும் மற்றிவள் தேவதேவ
பிரானென்றே
நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க நெக் கொசிந்து கரையுமே
(6.5.2)

மேலும் அவனுடைய சேஷ்டிதங்களையே பேசுகிறாள்.

திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலம் தாவி யளந்ததும் நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி நெடுங்கண் நீர் மல்க நிற்குமே (6.5.3)

சிறுவர்களை விழாக்காலத்தில் அழைத்துச் சென்றால் அங்கு உள்ள வேடிக்கைகளைப் பார்த்து மகிழ்வர். ஆனால் அந்த எம்பெருமானிடம் இவள் மனதைக் கொடுத்தது எப்படி என்று அன்னை வினவ தோழி சொல்கிறாள்.

குழையும் வாண்முகத்தேழையைத் தொலைவில்லி மங்கலம்
கொண்டு புக்கு
இழைகொள் சோதிச் செந்தாமரைக்கண்பிரான் இருந்தமை
காட்டினீர்
மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினொடு அன்று
தொட்டும்மையாந்து இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும் அத்திசையுற்று
நோக்கியே. (6.5.5)

அழகிய முகத்தையுடைய உன் பெண்ணை தொலைவில்லிமங்கலம் அழைத்துப் போனாய். போனதன்றி ஒளிமிக்க செந்தாமரைக் கண்ணையுடைய எம்பெருமான் இருப்பதைக் காட்டினாய். அன்றிலிருந்து இவள் அவ்வூரில் நுழைவதே நினைவாக அத்திசை நோக்கி கை தொழுகிறாள். எவர் பேச்சையும் கேட்கமாட்டாள்.

"கருந்தடங்கண்ணி கைதொழுத அந்நாள் தொடங்கி இந்நாள் தோறும் இருந்திருந்து அரவிந்தலோசனென்று நைந்திரங்கும், என்றும்" சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் தொலைவில்லிமங்கலத்துறை தேவபிரானையே தொழுது நிற்கும் இவளிடத்தில் உங்கள் ஆசையை விட்டு விடுங்கள்" என்றும் சொல்லுகிறாள்.

**அறத்தொடு நின்ற**

இந்தப் பெண் எப்பொழுதும் பித்துப் பிடித்ததுபோல் இருக்கிறாள். இவள் இப்படியே இருந்தால் இவளுக்குத் தக்க சமயத்தில் நாம்

திருமணம் செய்து வைக்காதது தான் இதற்கு காரணம் என்று ஊரார் நம்மைப் பழி சொல்லுவார்கள். அதனால் அவளுக்குத் திருமணத்திற்குத் தகுந்த வரனை தேட ஒரு சுயம்வரம் ஏற்பாடு செய்வோம் என்று தாயாரும் மற்றையோரும் முனைய, தோழி, இது ஆபத்தில் முடியுமே, மனதில் எம்பெருமான் இருக்க இவளை வேறொருவருக்கு மணம் முடித்தல் அறமன்றே, தர்மமல்லவே என்று எண்ணி இவளுடைய உள்ளக் கிடக்கையை தாயாருக்குத் தெரிவிக்க வேணுமென்று எண்ணுகிறாள். ஆனால் தாயார் இவ்வளவு காலம் இவளைப் பற்றி அறிந்திருந்தும் எங்களுக்குச்சொல்லாதது ஏன்? என்று கூறி நம்மேல் குறை கூறுவார்கள். ஆதலால் நாம் நிச்சயம் அறியாதது போலவும் இவளுடைய பேச்சு செய்கை முதலியவற்றைக் கொண்டு ஊகித்ததாகவும் சொல்லுவோம் என்று நிச்சயித்து சொல்லுகிறாள்.

கருமாணிக்க மாலைமேல் மணிததடம் தாமரைக்காடுகள் போல்
திருமார்வுவாய்கண்கை உந்திகாலுடையாடைகள் செய்ய-
பிரான்
திருமாலெம்மான் செழுநீர்வயல் குட்டநாட்டுத்திருப்புலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சிலன் அன்னைமீர் இதற்கென்
செய்கேனே (8.9.1)

ஒரு கரியமாணிக்கமே மலையாய்த் தோன்றுவது போல எம்பெருமாள் திருமேனி. அதில் தாமரைக்காடுக்ள போல பெருமானுடைய திருமார்பு வாய் கண் கை திருவடி பீதாம்பரம் இவை பிரகாசிக்கின்றன. அப்படிப் பட்டடவன் செழித்த வயல் சூழ்ந்த குட்டநாட்டுத் திருப்புலியூர் என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கிறான். இவள் வாய் திறந்தால் அவன் பெயரன்றி வேறு எதுவும் பேசுவதில்லை. நான் என்ன செய்வேன்.

அன்னைமீர் இதற்கென் செய்கேன் அணிமேருவின் மீதுலாவும்
துன்னுசூழ் சுடர் ஞாயிறும் அன்றியும் பல்சுடர்களும் போல்
மின்னு நீள்முடியாரம் பல்கலன் தானுடையெம்பெருமான்
புன்னையம்பொழில்சூழ் திருப்புலியூர் புகழுமிவளே.

(8.9.2)

மேரு மலைமீது தோன்றும் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டு வேறு பல சூரியன்கள் போல் ஒளிவிடுகின்ற பல திவ்யாபரணங்களை அணிந்த எம்பெருமான் நித்யவாஸம் செய்யும் புன்னை மரங்கள் சூழ்ந்த திருப்புலியூரைப் புகழ்கிறாள் என்றும்

ஊர்வளங்கினர்சோலையும் கரும்பும் பெருஞ்செந் நெல்லும்
சூழ்ந்து
ஏர்வளங்கிளர்தண்பணைக் குட்டநாட்டுத்திருப்புலியூர்
சீர்வளங்கிளர் மூவுலகுண்டுமிழ்தேவபிரான்
பேர்வளங்கிளர்ந்தன்றிப்பேச்சிலள் இன்று இப்புனையிழையே
(8.9.3).

கரும்பும் செந்நெல்லும் சோலையும் சூழ்ந்த குட்டநாட்டுத் திருப்புலியூரில்உலகமூன்றையும் ப்ரளய காலத்தில் உண்டு மீண்டும் ஸ்ருஷ்டி காலத்தில் வெளியில் விட்ட பெருமான் உறைகிறான். அவனுடைய அந்த திவ்ய தேசத்தை தவிர இவள் வேறு ஒன்றும் பேசுவதில்லை என்றும் தாயாரிடம் சொல்லி மூவுலகுக்கும் நாயகனான அப்பன் திருவருளுக்கு இவள் இலக்காகினாள் என்று தான் கருதுவதாகச் சொல்கிறான்.

ஆக அவனுடைய ஸௌந்தரியத்தையும் திவ்ய ஆபரணங்களையும் திவ்யாயுதங்களையும் எடுத்துச் சொல்லி அவன் மூவுலகாளி என்று அவன் பெருமைகளைச் சொல்லுகிறாள்.

தாயார் இதனாலெல்லாம் இவளுக்கும் திருப்புலியூர் எம்பெரு மானுக்கும் ஸம்பந்தம் ஏற்பட்டதாகச் சொல்ல முடியுமோ? வேறு ஏதேனும் அடையாளம் உண்டா என்று கேட்க

அன்றி மற்றோர் உபாயமேன்? இவள் அந்தண்துழாய் கமழ்தல்
குன்ற மாமணி மாட மாளிகைக் கோலக்குழாங்கள் மல்கி
தென் திசைத்திலதம்புரை குட்ட நாட்டுத்திருப்புலியூர்
நின்ற மாயப்பிரான் திருவருளாம் இவள் நேர்பட்டதே
(8.9.10).

குன்றம்போல் உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்ததும் தென் திசைக்கு ஒரு அணிகலன் போன்றதுமான குட்ட நாட்டுத் திருப்புலி

யூரிலுள்ள ஆச்சரிய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான் திருவருளுக்கு இவள் இலக்கானாள். இல்லாவிட்டால் எம்பெருமான் திருமேனியை அலங்கரிக்கும் திருத்துழாயின் மணம் இவளிடம் வீசுவதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? ஆகையினால் இவளுக்கு வேறு இடத்தில் மணமுடிக்கும் எண்ணத்தை விட்டு விடுங்கள் என்று தோழி சொல்லுகிறாள்.

ஆக இந்த மூன்று திருவாய்மொழிகளிலும் சேதனனுடைய அநந்யார்ஹ சேஷத்வத்தை ஆழ்வார் தோழி வாயிலாக நமக்குத் தெரிவிக்கிறார்.

இனி தாய்ப்பேச்சாக உள்ள ஏழு திருவாய்மொழிகளைப் பார்ப்போம்.

**1. வாடி**

ஆடிஆடி அகங்கரைந்து இசை
பாடிப் பாடிக் கண்ணீர்மல்கி எங்கும்
நாடி நாடி நரசிங்காவென்று
வாடி வாடும் இவ்வாணுதலே (2.4.1)

எம்பெருமானுடைய அனுபவம் கிடைக்கப்பெறாமல் இந்த அழகிய நெற்றியையுடைய பெண் ஆடி ஆடி மனம் உருகி பாடிக்கொண்டு நரசிங்காவென்று அவனையே நாடி உடலும் உள்ளமும் வாடியிருக்கிறாள்.

உம்மைக்காண இவள் ஆசைப்படுகிறாள். பாணாசுரனின் ஆயிரம் தோள்களை துணித்தவரே! நெருப்பின் அருகில் இருக்கும் அரக்கும் மெழுகும் போல் இவள் உருகுகின்றாள். இலங்கை அரக்கனைக் கொன்றவரே. உமக்கு இரக்கமில்லையா நான் என்ன செய்வேன்.

வாணுதல் இம்மடவரல் உம்மைக்
காணுமாசையுள்நைகின்றாள் விறல்
வாணன் ஆயிரந்தோள் துணித்தீர் உம்மைக்
காண நீரிரக்கமிலீரே (2.4.2 )

இரக்கமனத்தொடு எரியணை
அரக்குமெழுகும் ஒக்குமிவள்
இரக்கமெழீர் இதற்கென் செய்கேன்
அரக்கனிலங்கை சென்றீருக்கே (2.4.3 )

*இவள் இராப்பகல் வாயால் வெருவுகின்றாள். கண்ணிர் பெருக்குகிறாள். வண்டு மொய்க்கும் துழாய் மாலையை இவளுக்குத்தர மாட்டீர். இது என்ன உம்முடைய தர்மம்?*

தகவுடையவனே என்னும் பின்னும்
மிகவிரும்பும் பிரான் என்னும் எனது
அக உயிர்க்கு அமுதே என்னும் உள்ளம்
உக உருகிநின்றுள்ளுளே (2.4.4)

*உறங்கும் காலம் எழுங்காலம் எதுவும் இவள் அறியவில்லை. எப்பொழுதும் மணமுள்ள திருத்துழாய் என்றே சொல்லுகிறாள். ஒளி பொருந்திய சக்கரத்தை உடையவனே இவள் விஷயத்தில் நீர் என்ன விரும்புகிறீர்?*

பட்டபோது எழுபோதறியாள் விரை
மட்டலர் தண் துழாயென்னும் சுடர்
வட்டவாய் நுதிநேமியீர் உமது
இட்டமென்கொல் இவ்வேழைக்கே (2.4.9)

*இப்படித்தாயார் பெண்ணின் நிலை கண்டு எம்பெருமானிடம் நியாயம் கேட்கிறாள்.*

2. மெலிந்து

*ஊரார் வந்து தாயாரிடம் உன் பெண் இப்படி மெலிந்து ஊண் உறக்கமின்றி இருக்கிறாளே இவளுக்கு என்ன ஆயிற்று என்று கேட்க அன்னை சொல்கிறாள்*

பாலனாயேழலகுண்டு பரிவின்றி
ஆலிலையன்னவசம் செய்யும் அண்ணலார்
தாளிணை மேலணி தண்ணந்துழயேன்றே
மாலுமால் வல்வினையேன் மடவல்லியே (4.2.1).

பிரளயகாலத்தில் அனைத்துலகங்களையும் வயிற்றில் கொண்டு ஒரு குழந்தையாக ஆலிலையில் துயின்ற எம்பெருமானின் திருவடியிலிருக்கும் துழாயை விரும்புகிறாள். இந்தப்பாவியின் பெண்.

இப்படி ஒவ்வொரு பாசுரத்திலும்ஆய்ச்சியரோடு குரவைக் கூத்து ஆடியவன், வேத கோஷம் செய்து வானவரும் முனிவரும் துதிக்கும் எம்பெருமான், என்றும் பல்வேறு மதஸ்தர்கள் பலவிதமாகச் சொல்லும் எம்பெருமான் என்றும் ஆயர்சிறுவனாகக் குடக்கூத்தாடிய எம்பெருமான் என்றும் பூமிதேவிக்காக வராஹமாக வந்து பூமியை ஏந்தியவர் என்றும் திருமகளைத் தன் மார்பில் வைத்தவன் என்றும் சீதாப்பிராட்டிக்காக இலங்கை நகரை அம்பினால் எரித்தவன் என்றும் இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருத்துழாய் வேண்டிப்பிதற்றுகிறாள். நங்கைமீர் நான் இதற்கென் செய்கேன் என்று சொல்லுகிறாள்.

நங்கைமீர் நீரும் ஓர் பெண் பெற்று நல்கினீர்
எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற ஏழையை
சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல் என் செய்கேன் (4.2.9)

பெண்களே உங்களுக்கு சிறு வயதுப் பெண்களிருக்கிறார்கள். நான் பெற்ற இவளைப் பற்றி நான் என்ன சொல்லுவேன். சங்கென்றும் சக்கரமென்றும் எப்பொழுதும் சொல்கிறாள். நான் என்ன செய்வேன்.

என் செய்கேன் என்னுடைப்பேதை என் கோமளம்
என் சொல்லும் வசமுல்லள் நங்கைமீர்
மின்செய்பூண் மார்பினன் கண்ணன் கழல் துழாய்
பொன் செய்பூண் மென் முலைக்கென்று மெலியுமே (4.2.10)

என் மகள் என் வசத்திலில்லை என் சொல் கேளாள். பெரிய பிராட்டியை மார்பில் அணிகலன் போல் கொண்டவன் திருவடி திருத்துழாய் தன்னுடைய பொன் ஆபரணம் திகழும் மார்பகத்தில் அணிய வேண்டும் என்று வருந்தி மெலிந்திருக்கிறாள் என்று தாயார்

சொல்லும் சொற்களில் தன் பெண் மேல் வருத்தம் இருப்பது போல் காணப்பட்டாலும் என் பெண் அடைந்துள்ள சிறந்த பக்திநிலை உங்கள் பெண்ணுக்கு உள்ளதா என்று சிறிது பெருமையும் தோற்றுகிறது.

(மின்செய்பூண்மார்பினன் नीलतोयदध्यस्था विधुल्लेरवेव भास्वारा (श्रीसूक्तं) கருத்தமேகத்தினிடையே மின்னல் கொடிபோல் பிரகாசிக்கிற பிராட்டி என்று பிராட்டியை மின்னலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. பெரிய வரைமார்பில் பேராரம்பூண்டு என்ற இரண்டாம் திருவந்தாதிப் பாசுரத்தில் வரும் கரியமுகிலிடைமின்போல என்கிற சொற்றொடரும் கவனிக்கத்த தக்கது).

3. பித்தேறி

இது ஆழ்வார் பெண் தன்மையையடைந்து உலகில் காணும் பொருள்களெல்லாம் எம்பெருமானோடு ஸம்பந்தப்பட்டது என்று எதைக் கண்டாலும் அவன் நினைவாகவே இருக்கும்படி வேறு எதிலும் சிந்தை செல்லாது பிதற்றுகிறாள். இதற்கு நான் என்ன செய்வேன் என்று தாயார் குறைபட்டுக்கொள்வதாக அமைந் திருக்கிறது.

மண்ணையிருந்து துழாவி வாமனன் மண் இதுவென்னும்
விண்ணைத் தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கை
காட்டும்
கண்ணையுண்ணீர்மல்க நின்று கடல் வண்ணன் என்னும்
அன்னே என்
பெண்ணைப் பெருமயல் செய்தார்க்கு என் செய்கேன்
பெய்வளையிரே (4.4.1).

அழகிய வளையணிந்தவர்களே என் பெண் மண்ணைத் துழாவுகிறாள். மாவலியிடம் நீ மூவடி மண் வாங்கி அளந்து கொண்ட மண் இதுவென்கிறாள். விண்ணை நோக்கிக் கைதொழு கிறாள். அவன் உறையும் வைகுந்தமென்கிறாள். கண்ணீர் பெருக கடல் வண்ணன் என்கிறாள். இப்படி என் பெண்ணை பெருங்காதலுறச் செய்தவனை நான் என்ன செய்வேன்?

பெய் வளை கைகளைக் கூப்பிப் பிரான் கிடக்கும்
கடலென்னும்
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டி சிரீதரன் மூரத்தி ஈதென்னும்
நையும் கண்ணீர் மல்க நின்று நாரணனென்னும் அன்னே என்
தெய்வவுருவிற்சிறுமான் செய்கின்றதொன்றறியனே

(4.4.2)

*கடலைக் கண்டால் அவன் அரவணை மேல் துயிலும் கார்க்கடல் என்கிறாள். சிவந்த சூரியனைக் காட்டி இது அவன் திருமேனி என்கிறாள். கண்கள் நீர் மல்க நாரணா என்று புலம்புகிறாள். தெய்வத்தன்மையுடைய இந்தச் சிறுபெண் செய்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை.*

கோமளவான் கன்றைப்புல்கி கோவிந்தன் மேய்த்தவைன்னும்
போமிளநாகத்தின் பின் போய் அவன் கிடக்கை ஈதென்னும்
ஆமளவொன்றும் அறியேன் அருவினையாட்டியேன் பெற்ற
கோமளவல்லியை மாயோன் மால் செய்து செய்கின்ற கூத்தே

(4.4.5)

*சிறிய கன்றைப் பார்த்து இது கண்ணன் மேய்த்தது என்கிறாள். ஆடுகிற பாம்பைப் பார்த்து இது அவன் படுக்கை என்கிறாள். உலகத்தில் காணப்படாத அளவு வினைப் பயனையுடைய எனக்கு ஒன்றும் புரியவில்லை மென்மையான என் மகளை ஆச்சரிய சேஷ்டிதங்கள் செய்யும் அவன் மயக்கி செய்யும் கூத்துக்களை என்னவென்று சொல்வேன்?*

கூத்தர் குடமெடுத்தாடில் கோந்தனாமெனா ஓடும்
வாய்த்த குழலோசை கேட்கில் மாயவனென்றுமையாக்கும்
ஆய்ச்சியர் வெண்ணைகள் காணில் அவனுண்ட வெண்ணை
ஈதென்னும்
பேய்ச்சிமுலை சுவைத்ததார்க்கு என் பெண் கொடி ஏறியபித்தே

(4.4.6)

*குடக்கூத்தாடுபவரைக் கண்டால் கண்ணா என்று ஓடுகிறாள். எங்கிருந்தோ இனிய குழலோசையை கேட்டால் மாயவனென்று*

மயங்குகிறாள். ஆய்ச்சியர் திரட்டிவைத்த வெண்ணை கண்டால் இது அவனுண்ட சேஷமென்கிறாள். பூதனையின் பாலோடு உயிரையும் உண்ட கண்ணனிடம் என் பெண்ணுக்கு இப்படிப் பித்தேறியிருக்கிறதே

இப்படிப் பலவாறாகச் சொல்லி இப்படிக் காதலில் மூழ்கியிருக்கிற என் அறியாப்பெண்ணுக்கு வலிவான வினைப்பயனை உடைய நான் என்ன செய்வேன். என்று தாய் புலம்புகிறாள்.

**5. ஏறப்பேசி**

இப்படி உலகும் அதில் காணும் பொருள்களெல்லாம் எம்பெருமான் ஸம்பந்தப்பட்டவை என்று புலம்பிக் கொண்டிருந்த பராங்குச நாயகி திடீரென்று இவையெல்லாம் நானே. இவற்றை செய்தவனும் நானே அழிப்பதும் நானே என்று பேசுகிறாள். இது கண்டு அண்டை அயலார் வந்து இவளுக்குப் பித்து முற்றியிருப்பதாக காண்கிறதே. இது ஏன் என்று கேட்க தாயார் எம்பெருமானே இவள் மேல் ஆவேசித்து ஏறி இவள் வாயால் பேசுகிறார்போல் தோன்றுகிறது. எனக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை என்கிறாள்.

கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும்
கடல் ஞாலம் ஆவேனும் யானே யென்னும்
கடல் ஞாலம் கொண்டேனும் யானேயென்னும்
கடல் ஞாலம் கீண்டேனும் யானேயென்னும்
கடல் ஞாலம் உண்டேனும் யானேயென்னும்
கடல் ஞாலத்தீசன் வந்தேறக்கொலோ
கடல் ஞாலத்தீர்க்கிவையென் சொல்லுகேன்
கடல் ஞாலத்தென் மகள் கற்கின்றவே

(5.6.1)

இந்தக்கடல் சூழந்த உலகத்தை படைத்ததும் நானே இதாக இருப்பதும் நானே இதனை மாவலியிடமிருந்து யாசித்துப் பெற்றதும் நானே என்றெல்லாம் இவள் சொல்லுவதைக் கேட்டால் இந்த உலகிற்கு ஈசனான எம்பெருமானை இவள் மேல்

ஆவேசித்திருக்கிறானோ என்று தோன்றுகிறது. என்மகள் பேசுகின்றதைப் பற்றி இந்த உலகத்தார்க்கு வேறென்ன சொல்லுவேன். இவ்வாறே கற்கும் கல்வி காண்கின்ற நீர் நிலம் காற்று தீ கடல் எல்லாம் செய்தழித்துக் காப்பதும் எலலாச் செயல்களும் எலலா சேஷ்டிதங்களும் உலகில் நடைபெறும் ஒவ்வொன்றும் சுவர்க்கமும் நரகமும் அமாரும் அசுரரும் அரக்கரும் எல்லாம் தானே என்று பேசுவதைக் கேட்டால் என்கு ஒ்னறும் காரணம் தெ்ரியவில்லை என்று தாயார் சொல்லுகிறாள். பெண் எம்பெருமானை அடையாத ஆற்றாமையாலேதானே எம் பெருமான் நிலையில் பேசுகிறாள் என்று உணராமல் எம்பெரு மானே இவள் மேல் ஆவேசித்தானோ என்று எண்ணுகிறாள். கண்ணனைப் பிரிந்த கோபியர் ஒன்று கூடியிருக்கும்போது ஒருத்தி தன்னை கண்ணனாக நினைத்துக் கொண்டு மற்றொருத்தியைக் காளியனாக உருவகித்து) दुष्ट कालीय तिष्ठ त्वं துஷ்டனான காளீயனே நில் என்பது முதலாக கண்ணனை பிறந்த போதும் அவனுடைய சேஷ்டிதங்களை அனுபவித்தார்கள் என்ற பாகவதப்பகுதி நினைக்கத் தகுந்தது.

**6. கட்டிழந்து**

மாலுக்குவையமளந்த மணாளற்கு
நீலக்கருநிற மேக நியாயற்கு
கோலச் செந்தாமரைக் கண்ணற்கு என்கொங்கல
ரேலக்குழலி இழந்தது சங்கே (6.6.1)

மணம் வீசுகின்ற கூந்தலையுடைய என் பெண் உலகமளந்தவனும் கரிய மேகத்தைஒத்த நிறமுடையவனும் அழகிய செந்தாமரை போன்ற கண்களையுடையவனுமான திருமாலையே எண்ணி தன்கைவளையை இழந்தாள். அவனைவரக்காணாமையாலே உடல் வாடி மெலிந்து இவள் வளைகள் நழுவி விழுந்தன என்று தாய் சொல்லுகிறாள். இவ்வளவேயோ

சங்குவில்வாள் தண்டு சக்கரக்கையற்கு
செங்கனிவாய் செய்ய தாமரைக் கண்ணற்கு
கொங்கலர் தண்ணந்துழாய் முடியானுக்கு என்
மங்கையிழந்தது மாமை நிறமே (4.6.2 )

சிவந்த கோவைப் பழத்தை போன்ற உதடுகளை யுடையவனும் தாமரை போன்ற கண்களையுடையவனும் குளிர்ந்த துழாயை முடியில் அணிந்திருப்பனுமான எம்பெருமானுக்குத் தன் நிறத்தையிழந்தாள். இவ்வாறாகத் தன்னுடைய அனைத்தையும் இழந்தாள்.

பொற்பமைநீள்முடி பூந்தண்துழாயற்கு
மற்பொருதோளுடை மாயப்பிரானுக்கு
நிற்பனபல்லுருவாய் நிற்குமாயற்கு என்
கற்புடையாட்டி இழந்தது கட்டே

(6.6.10)

இப்படி அவனுக்கு தன்னுடைய அனைத்தையும் கட்டடங்க இழந்தாள். தன்னையே முழுவதுமாக இழக்கும் அளவுக்கு எம்பெருமானிடம் இவள் வ்யாமோகம் மிகுந்திருக்கிறது என்று தாய் சொல்லுகிறதாக அமைந்திருக்கிறது இந்த திருவாய்மொழி.

**6. அகன்று**

உண்ணும்சோறு திருவாய் மொழியில் தன்பெண் பெண்மைக்குரிய தன்மையை மீறித்தானே நாயகனிருக்குமிடமான திருக்கோளூருக்கு கிளம்பிச் செல்கிறாள் என்று தாயார் முறையிடுகிறாள்.

உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெருமானென்றென்றே கண்கள் நீர் மல்கி
மண்ணினுளவன் சீர் வளம் மிக்கவனூர் வினவி
திண்ணமிளமாள் புகுமூர் திருக்கோளூரே (6.7.1. )

என் பெண் எல்லாரையும் போல் உணவுகொள்வதில்லை. தண்ணீர் குடிப்பதில்லை வெற்றிலை போடுவதில்லை. இவையெல்லாம் தனக்கு எம்பெருமான் கண்ணனே என்றிருக்கிறாள். இப்படி தாரக போஷக போக்யங்களை எல்லாம் எம்பெருமான் சிந்தையே என்று கொண்டு அவன் நித்யவாஸம் செய்யும் வளம் மிக்க திருக் கோளூருக்கு செல்கிறாள்.

கொல்லையென்பர் கொலோ குணம் மிக்கனள் என்பர் கொலோ
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாருமெல்லே
செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடை நுடங்க இளமான் செல்லமேவினளே (6.7.4.)

*வம்பளக்கும் பெண்களும் அண்டை அயவாரும் இவளுடைய இந்தச் செயலை தவறு என்பர்களோ அன்றி இவள் அன்பைமெச்சி இது நற்குணம் என்பர்களோ? செல்வம் நிறைந்த திருக் கோளூருக்கே தன் சிற்றிடை ஒடிந்து விழுமோ என்று ஸந்தேகப்படும்படி இவள் போய்க்கொணடிருக்கிறாள்.*

இன்றெனக்கு உதவாதகன்ற இளமான் இனிப்போய்
தென் திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்று தன் திருமால் திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு
நின்று நின்று நையும் நெடுங்கண்கள் பனிமல்கவே.(6.7.6)

*தோழி சொன்னது போல் எனக்கு கட்டுப்படாமல் அகன்று இந்தப் பெண் தென் திசைககு அணிகலன் போன்ற திருக்கோளூருக்குப் போய் அழகிய கண்களையும் சிவந்த வாயையும் உடைய நாயகனைக் கண்டு கண்களில் நீர் துளிக்க நின்று உள்ளம் உருகி நிற்கிறாள்.*

நினைக்கிலேன் தெய்வங்காள் நெடுங்கணிளமான
 இனிப் போய்
அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை
தினைத்தனையும் விடாள் அவள் சேர்திருக்கோளூர்க்கே
மனைக்குவான்பழியும் நினையாள் செல்லவைத்தனளே
(6.7.10 )

*நான் என்னவென்று நினைப்பேன் என் இளம்பெண் எல்லா உலகங்களுக்கும் நாயகனான அரவிந்தலோசனனை விட்டு நீங்கமாட்டாள். அவனிருக்கும் திருக்கோளுரூக்கே செல்ல முற்பட்டாள். இவள் செயலால் தன் குலத்திற்கு உண்டாகும் பெரும் பழியையும் நினைக்கவில்லையே என்று தாயார் முறையிடும் ஆறாவது திருவாய்மொழியாக இந்தத் திருவாய் மொழி அமைந்திருக்கிறது.*

## 7. சார்வதே வலித்தமை

இவ்வளவிலும் எம்பெருமான் இந்தப்பெண்ணை கைக்கொள்ள வில்லையே இராப்பகல் உறக்கம் கொள்ளவில்லை சங்கு சக்கரமென்று கை கூப்புகிறாள் தாமரைக்கண்ணனென்று தளர்கிறாள். உன்னைவிட்டு எப்படி தரித்திருப்பேன் என்கிறாள். கண்களிலிருந்து அருவியாக பெருகும் கண்ணீரை கைகளால் இரைக்கிறாள். மீன்கள் விளையாடும் நீர்வளம் மிக்க திருவரங்த்தில் உறைபவனே இவள் விஷயத்தில் என்னசெய்கிறாய் என்று தாயார் வினவுகிறாள்.

கங்குலும்பகலும் கண்துயிலறியாள்
  கண்ணநீர் கைகளாலி றைக்கும்
சங்கு சக்கரங்களன்று கைக்கூப்பும்
  தாமரைகண்ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டென்னும்
  இருநிலம் கைதுழாவிருக்கும்
செங்கயல் பால் நீர்த்திருவரங்கத்தாய்
  இவள்திறத்தென் செய்கின்றாயே (7.2.1)

இவ்வாறு மகள் சொல்வதையம் செய்வதையும் தானும் உடன் சொல்லி அடர்ந்த கொடிகள் படர்ந்த மதிள் சூழ்ந்த அரங்கனே இவள் திறத்தில் என்ன செய்தாய் என்று வினவுகிறாள்.

வட்கிலள் இறையும் மணி வண்ணா என்னும்
  வானமே நோக்கும் மையாக்கும்
உட்குடையசுரருயிரெல்லமுண்ட
  ஒருவனேயென்னும் உள்ளுருகும்
கட்கிலீ உன்னைக் காணுமாறருளாய்
  காகுத்தா கண்ணணே என்னும்
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்
  இவள் திறத்தென் செய்திட்டாயே (7.2.3)

கைகளும் கால்களும் வைத்தது வைத்தபடி அசையாமலிருக்கிறாள். எழுந்து இங்குமங்கும் உலாவுகிறாள். மயங்குகிறாள் கைகூப்பு

கிறாள் என்னுடைய காதலுக்கு நல்ல முடிவில்லையே என்று மூர்ச்சையடைகிறாள் கடல்வண்ணா என் நிலையைப்பார் என்கிறாள். வட்டமான அழகிய சக்கரத்தை வலக்கையில் கொண்டவனே என்றும் வந்திடாய் என்றும் சொல்லி மயங்கு கிறாள். அரங்கனே இவள் திறத்து நீ என்ன நினைத்திருக்கிறாய்.

இட்டகாலிட்டகையளாயிருக்கும்
  எழந்துலாய்மயங்கும் கைகூப்பும்
கட்டமே காதலென மூர்ச்சிக்கும்
  கடல் வண்ணா கடியை காணென்னும்
வட்டவாய் நேமி வலங்கையா என்னும்
  வந்திடாயென்றென்றே மயங்கும்
சிட்டனே செழுநீர்த் திருவரங்கத்தாய்
  இவள் திறந்தென் சிந்தித்தாயே (7.2.4)

சிட்டனே என்பது உயர்வு நவிர்ச்சி அதாவது புகழ்வது போல் இகழ்வது.

மேலும் பெரிய திருமொழி திருவிடந்தைப்பதிகமான திவளும் வெண்மதிபோல் என்று தொடங்கும் பாசுரத்தில் தாயார் பரகாலநாயகி விஷயமாக உன் மனத்தால் என் நினைந்திருந்தாய் இடவெந்தை எந்தைபிரானே என்னுமிடம் இதோடு ஒப்பிடத் தக்கது.

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்
  திருவரங்கத் துள்ளாய் என்னும்
வந்திக்கும் ஆங்கே மழைக்கண்ணீர்மல்க
  வந்திடாயென்றெ ன்றே மயங்கும்
அந்திப் போதவுண னுடலிடந்தானே
  அலைகடல்கடைந்த ஆரமுதே
சந்தித்து உன் சரண் சார்வதே வலித்த
  தையலை மையல் செய்தானே (7.2.5 )

சிறிது சிந்தனை செய்கிறாள் திகைத்து நிற்கிறாள் மனம் தேறுகிறாள் கை கூப்புகிறாள் திருவரங்கனே என்று வணங்குகிறாள் கண்கள்

மழைபோல் நீர்பெருக்க, வந்திடாயென்கிறாள் மயங்குகிறாள் ஸந்தியாகலத்தில் இரண்யகசிபுவின் மார்பைப் பிளந்தவனே அலை கடல் கடைந்து அமரர்க்கு அமுதளித்த அமுதமே உன் திருவடிகளில் சரணமடைவதே நோக்காக உன்னிடம் காதல் கொள்ளும்படிச் செய்தவனே

இவ்வாறு மகளோடு தாயார் பலவிதமாகப் புலம்பி என்மகளுக்கு நான் என்ன செய்வேன் என்றும் சொல்கிறாள். பலவிதமாகவும் தன்னுடைய மகள் எம்பெருமானிடம் கடலிலும் பெரிதான காதலினால் செய்தவையாக் கொள்ள வேண்டுமே தவிர அவன் வந்து அங்கீகரிக்க வேண்டியிருக்க தானே முயற்சிசெய்ததாக நினைக்க வேண்டாம் என்றும் முறையிடுகிறாள்.

கழிபெருங்காதலினால்தான் மகள் செயல்கள் உண்டாயின என்றும் தன் முயற்சியாக அல்லவென்றும் தாயார் பாசுரங்கள் அமைந்திருக்கின்றன.

இனிமகள் தன் பேரவாவினால் தன் காதலை வெளிப்படுத்திய முறையை அடுத்துப் பார்ப்போம்.

**புத்திரி பலகால் ஆள்விட்டு**

மகள் பேச்சாக ஆழ்வார் அருளிய பதினேழு திருவாய்மொழிகளில் நான்கு தூதுப்பாசுரங்கள் கொண்டவை

பக்ஷிகளைத் தூது விடுவானேன் என்றதற்கு ஆசார்ய ஹ்ருதயம் சொல்லுகிறது.

> சேர்ப்பாரைப்பக்ஷிகளாக்கி ஞானகர்மங்களைச்சிறகாக்கி
> குரு ஸப்ரம்மசாரி புத்ர சிஷ்யஸ்தானே பேசும் (ஸூ. 150)

எம்பெருமானோடு சேதனனை சேர்த்து வைக்க உதவும் குருவாகவும் உடன் பயிலும் மாணக்கர்களாகவும் புத்திரனாகவும் சிஷ்யராகவும் இப்படி வெவ்வேறு விதங்களாகப் பக்ஷிகளிடம்

பேசுவதுபோல் பாசுரங்கள் அமைந்துள்ளன. பக்ஷிகளின் சிறகுகள் ஞானம் அனுஷ்டானம் இரண்டையும் உருவகப்படுத்துபவை.

தூதுப் பாசுரங்களை விளக்க அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தனியாக ஒரு ஸூத்ரம் அருளியிருக்கிறார்.

> தம்பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமா தீக்ஷா ஸாரஸ்ய ஸௌந்தர்யங்களை உணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வ த்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்
>
> (ஸூ. 154).

இந்த ஸூத்ரத்தை நான்காகப் பிரித்துக் கொள்ள வேணும்.

1. தம்பிழையை மறப்பித்த க்ஷமையை உணர்த்தும் வ்யூஹம் ஒரு தூதுக்கு விஷயம் (அஞ்சிறையமடநாராய்)
2. சிறந்த செல்வம் மறப்பித்த தீக்ஷையை உணர்த்தும் விபவம் இரண்டாவது தூதுக்கு விஷயம் (வைகல்பூங்கழி)
3. படைத்த பரப்பு மறப்பித்த ஸாரஸ்யத்தை உணர்த்தும் பரத்வத்வயம் மூன்றாவது தூதுக்கு விஷயம் (பொன்னுலகாளீரோ)
4. தமரோட்டைவாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை உணர்த்தும் அர்ச்சாவதாரம் நான்காவது தூதுக்கு விஷயம் (எங்கானலகங்கழிவாய்)

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஐந்து நிலைகளில் இருக்கிறான். முதல் நிலை ஸாமகானம் முழங்கிக் கொண்டிருக்கும் பாட்டுக் கேட்குமிடமான பரமபதம்

இரண்டாவது தேவர்கள் தங்கள் குறைகளை முறையிடும்போது அதைக் கேட்டு ஆவன செய்வதற்காக கூப்பீடு கேட்குமிடமான வியூஹம். (திருப்பாற்கடல்)

மூன்றாவது உலகின் துயர் தீர்க்க பூமியில் வந்து அவதாரம் செய்யும் குதித்த இடமான விபவம்

நான்காவது ஸகல சேதனாசேதனங்களிலும் உள்ளிருந்து அவற்றின் செயல்களை நிர்வகிக்கும் வளைத்த இடமான அந்தர்யாமித்வம்

ஐந்தாவது நாமனைவரும் நேரில் கண்டு அனுபவிக்கும்படியான வகுத்த இடமான அர்ச்சாவதாரம்.

ஆழ்வார் இந்த ஐந்து நிலைகளுக்கும் மேற்சொன்ன நான்கு திருவாய்மொழிகளில் தூது விடுகிறாரென்று ஆசார்யஹ்ருதயம் சொல்கிறது.

அந்தர்யாமித்வம் பரத்வத்தைப் போலவே யாவர்க்கும் அறியமுடியாமலிருப்பதால் இவையிரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பரத்வத்வயம் என்கிறார் நாயனார்.

முதல் தூது - தம்பிழையை மறப்பித்த க்ஷமையை உணர்த்தும் வ்யூஹம் முதல் தூதான அஞ்சிறையமடநாராய் என்கிற முதல் பத்து நான்காம் திருவாய்மொழிக்கு விஷயம்.

முதல் திருவாய்மொழியில் உயர்வற என்று தொடங்கி எம்பெருமானுடைய ஸர்வேச்ரத்வம் ஸர்வ நியந்த்ருத்வம் ஸர்வாந்தர்யாமித்வம் முதலியவற்றை வெளியிடுகிறார். எம்பெருமான் நிர்ஹேதுகமாக தமக்கு மயர்வற மதிநலம் அருளினமையையும் சொல்கிறார்.

இரண்டாந்திருவாய்மொழியில் வீடுமின் முற்றவும் என்பது முதலாக அந்த எம்பெருமானை ஆச்ரயிப்பதற்கு உலகத்திலுள்ள பற்றுக்களை விடுங்கோள் என்று சொல்லுகிறார். அந்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் என்றும் அவன் திருவடிகளைப் பற்றியிருப்பதே உய்யும் உபாயம் என்று ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறார்.

ஆழ்வார் க்ருஷ்ணாவதாரத்தில் மண்டியிருப்பவராதலால் நாராயணன் என்றதும் அவருக்கு கண்ணன் நினைவு வருகிறது. அதிலும் அவனுடைய ஸௌலப்ய குணம் தோன்றுகிறது.

ஸர்வேசுவரன் ஆயர்பாடியில் வளர்ந்து வெண்ணை திருடி யசோதை கண்ணிக்கயிற்றினால் கட்ட தான் கட்டுண்டு நின்ற நிலையை எத்திறம் உரலினோடு இணைந்து இருந்தேங்கிய எளிவே என்று மனம் கரைந்து ஆறு மாதம் மூர்ச்சித்திருக்கிறார். எழுந்தபோது க்ருஷ்ணானுபவம் கிட்டப் பெறாமல் தன்னிலை போய்ப் பெண்ணிலையை அடைந்து எம்பெருமானிடம் சில பக்ஷிகளைத் தூது விடுகிறார்.

ஒருத்திமதியெல்லாமுள் கலங்கி மயங்குமாலென்னீரே என்றும் நன்னீர்மை இனி இவர்கண்தங்காதென்றொரு வாய்ச்சொல் நல்குவீர்களா என்று மகன்றில் பக்ஷியைத்ததூது அனுப்புகிறார்.

அப்பொழுது ஆழ்வாருக்குத் தான் செய்த ஏதோ பிழையை அபராதத்தை எண்ணி வாராதொழிந்தான் ஆச்ரிதர்களுடைய பிழைகளை பொறுக்கும் அவனுடைய க்ஷமாகுணத்தை நினைவு படுத்தினால் அவன் அவசியம் வருவான். எலும்புகளை உருக்குவதுபோல் பனியோடு வாடைக்காற்று வீசுகின்றது. என்னுடைய பிழையையே எண்ணி எனக்கு அருள் செய்யாத திருமாலுக்கு உன் க்ஷமாகுணத்திற்கும் மேற்பட்டு இவள் என்ன பிழை செய்தாள் என்றொரு சொல் சொல்வாய் எலும்பை உருக்கும் குரலுடைய கிளியே நான் உன்னை வளர்த்ததற்கு ப்ரதியாக இதைச் செய் என்கிறாள். எம்பெருமானுடைய க்ஷமா குணம் ப்ரஸித்த மானது ராவணனுக்குப் பிராட்டி உபதேசம் செய்யும் போது

तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि। सहि शरणागतवत्सल:

என்று தன்னை சரணடைந்தவர்களிடம் அவன் வாத்ஸல்யமே கொண்டவன் என்று சொல்லுகிறாள். பெரியாழ்வாரும் தாமரை யாளாகிலும் சிதகுறைக்க மேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்று சொல்லுகிறார். (பிராட்டி சேதனனை தண்டிக்க வேண்டும் என்று எப்பொழுதும் சொல்லமாட்டாள் அவளே ஒருவரைப்பற்றி எம்பெருமானிடம் குறைசொல்லுவாளாகில் எம்பெருமான் என்னடியார் அது செய்யார் அப்படி செய்திருந்தாலும் நல்லதே செய்தார் என்பார்.

என்பிழை கோப்பதுபோலப் பணிவாடையீர்கின்றது
என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு
என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்றொரு
வாய்ச்சொல்
என்பிழைக்குமிளங்கிளியே யான் வளர்த்த நீயலையே (8.4.7)

பக்ஷிகள் நாங்கள் எங்கு சென்று உன் வார்த்தையை அவரிடம் சொல்லுவோம் என கேட்பதாக நினைத்துக் கொண்டு ஆழ்வார் உலகையெல்லாம் ச்ருஷ்டித்த எம்பெருமான் கடலைத் தோற்றி அதனுள்ளே கண் வளர்கின்றவனும் சக்திவாய்ந்த சக்கரத்தை உடைய எம்பெரு மானைக் கண்டீர்களானால் இதைச் சொல்லிவிடுங்கள் என்று மனதையும் கூட்டிச் சொல்கிறார்.

இதனால் திருப்பாற் கடலில் கண்வளரும் வ்யூஹ எம்பெருமாளிடம் தூது விடுகிறார் என்றதாயிற்று.

இரண்டாவது தூது

நோற்ற நோன்பில் வானமாமலை எம்பெருமானிடம் சரணமடைந்தார் அவன் திருவடியே ஸித்தோபாயம் என்று அறுதியிட்டார். ஆராவமுதேயில் திருக்குடந்தை எம்பெருமானைச் சரணடைந்தார். அவனைத் தவிர வேறு.சரண்யன் தமக்கில்லை என்று சொன்னார். அடுத்து மானேய் நோக்கியில் திருவல்லவாழ் எம்பெருமானிடம் சரணம் புகுந்தார். எம்பெருமானுடைய நாமங்களே தமக்கு ரக்ஷகம் என்று சொன்னார். கடைசியாக பிறந்தவாறும் திருவாய்மொழியில் க்ருஷ்ணாவதரத்தில் அவன் செய்த ஆச்சரிய சேஷ்டிதங்களை அனுபவித்து பிரமனைப் படைத்து அவனைக் கொண்டு பிரபஞ்சத்தை தோற்றுவித்தும் வாமனாவதாரம் செய்து உலகையளந்ததும் தேவர்க்காக நீரைக்கடைந்து அமுதம் கொண்டதும் பிரளயகாலத்தில் உலகத்தை உண்டு மீண்டும் வெளியிட்டதையும் சொல்லி சரணடைகிறார்.

இவ்வளவுக்கு பிறகும் எம்பெருமானின் அனுபவம் கிடைக்காததால் பெண்தன்மையடைந்து எம்பெருமானிடம் பக்ஷிகளை தூது விடுகிறார்.

வைகலபூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்
செய்கொள் செந்நெலுயர் திருவண்வண்டூருறையும்
கைகொள் சக்கரத்தென் கனிவாய்ப் பெருமானைக் கண்டு
கைகள் கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே.

(6.1.1)

கால்வாய்களில் வந்து அமரும் குருகுகளே நிறைந்த செந்நெல் பயிர் வளர்த்த வயல்களுடைய திருவண்வண்டூரில் எழுந்தருளியிருக்கும் கையில் சக்கரத்தை தரித்தவனும் சிவந்த அதரங்களை உடையவனு மான எம்பெருமானைப் பார்த்து கைகளைக் கூப்பிக்கொண்டு என்னுடைய காதலின் தன்மையை அவருக்குச் சொல்லுங்கள்.

இப்பொழுது எம்பெருமான் வராததற்கு என்ன காரணமிருக்கு மென்று யோசித்து சிறந்த செல்வம் நிறைந்திருக்கும் திருவண் வண்டூரில் இருப்பதால் அவர் என்னைப் பற்றி மறந்திருக்க வேண்டும் என்று நினைத்து அருளிச்செய்கிறார்.

திறங்களாகியெங்கும் செய்களூடுழல்புள்ளினங்காள்
சிறந்த செல்வம்மல்கு திருவண்டூருறையும்
கறங்குசக்கரக் கைக்கனிவாய்பெருமானக் கண்டு
இறங்கி நீர்தொழுது பணியீர் அடியேனிடரே (6.1.3)

திறமையாக வயல்களில் அமர்ந்திருக்கும் பறவைகளே சிறந்த செல்வம் நிறைந்த திருவண்வண்டூரில் நித்யவாஸம் செய்யும் எம்பெருமானைக் கண்டு கைகூப்பி என் இடரைச் சொல்லுங்கள் என்றும் சொல்கிறார்.

இஙகே திருவண்வண்டூர் என்கிற திவ்ய தேசத்தைச் சொன்னபோதும் நமது ஆசார்யர்கள் இதை அர்ச்சாவதரத்தில் விட்ட தூதாகக் கொள்ளவில்லை. இத்தைவிபவத்தில் விட்ட தூதாகவே கருதுகிறார்கள்.

வேறுகொண்டு உம்மையானிரந்தேன் வெறிவண்டினங்காள்
தேறுநீர்ப்பம்பை வடபாலைத்திருவண்வண்டூர்

மாறில்போரரக்கன் மதிள் நீறெழச்செற்றுகந்த
ஏறு சேவகனார்க்கு என்னையும் உளளென்மின்களே (6.1.10)

உங்களிடம் தனியாக ஒரு வார்த்தை சொல்கிறேன். புஷ்பங்களில் அமர்வதனால் மணம் கொண்ட வண்டுகளே தூய நீரையுடைய பம்பையின் வடக்கு கரையில் உள்ள திருவண்வண்டூரில் எம்பிரானை பார்த்து எதிரியாகப் போரிடவந்த ராவணனின் நகரின் மதிள்கள் எரிந்து போகும்படி செய்தவனான மாவீரனான இராமபிரானுக்கு உன்னுடைய ரக்ஷணத்தை வேண்டி நிற்பது தண்டகாரண்யத்திலுள்ள முனிவர்கள் மட்டுமல்ல இராவணனிடம் சிறைப்பட்ட சீதாப்பிராட்டி மட்டுமல்ல நானும் காத்திருக்கிறேன் என்று சொல்லச் சொல்லி இராமவதாரத்தில் தூது விடுகிறாள். ஏனென்றால் இராமபிரான்தானே सकृदेव प्रपन्नाय तवामस्मीति च याचते अभयं सर्व भूतेभ्यो ददाम्येतद्‌ व्रतं मम என்றார்.

ஒருமுறையே சரணடைந்து நான் உன்னுடையவன் என்று சொல்லும் ஸகல ஜீவராசிகளுக்கும் அபயமளிக்கிறேன் இது என்வ்ரதம் இந்த வாதத்தை நினைவுபடுத்த, திருவண்வண்டூரின் சிறந்த செல்வம் அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியாது என்கிறார்.

மூன்றாவது தூது

திருக்கோளூருக்குத் தனிவழி சென்றும் எம்பெருமாள் அருள் கிட்டவில்லை. ஆதலால் மீண்டும் சில பக்ஷிகளை எம் பெருமானிடம் தூது செல்ல வேண்டுகிறார்.

மையமர்வாள்நெடுங்கண் மங்கைமார் முன்பு என் கையிருந்து
நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலோடு மேவீரோ
கையமர் சக்கரத்தென் கனிவாய்பெருமானைக் கண்டு
மெய்யமர் காதல் சொல்லிக் கிளிகாள் விரைந்தோடி வந்தே
(6.8.2)

கிளிகளே மை தீட்டிய அழகிய நீண்ட கண்களையுடைய என் தோழிகாள் என் கையிலிருந்து நெய் கலந்த அடிசிலுடன் பாலும் உண்பீர்கள். சக்கரபாணியும் சிவந்த அதரங்களையுடைய வனுமான எம்பெருமானுக்கு விரைந்து சென்று என் காதலை தெரிவியுங்கள்.

அவன் வராமைக்கு என்ன காரணமாயிருக்கும் என்று யோசித்து அவன் படைத்த பரந்த இந்த ப்ரபஞ்சத்தின் சிறப்பைப் பார்த்துக்கொண்டு இருக்கிறான். இங்கு ஓர் பெண் அவனுடைய திருவடிகளை அலங்கரிக்கும் துழாயை வேண்டி நிற்கிறாள். ஆகையால் நீங்கள் வாருங்கள் என்று அவருக்குச் சொல்லுங்கள்.

பொன்னுவகாளீரோ புவனிமுழுதாளீரோ
நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் யானிரந்தேன்
முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன்
என்னலங்கொண்ட பிரானுக்கு என் நிலமையுரைத்தே (6.8.1)

சிறந்த குணமுடைய பக்ஷிகளே உங்களை வேண்டுகிறேன். முன்பு உலகமனைத்தையும் படைத்த பெருமான் என் ஸர்வத்தையும் கொண்டான். அவனுக்கு என் நிலைமையை சொல்லுங்கள். சொன்னால் அவன் வருவான். வந்து என் காதலை ஏற்பான். அவன் என்னுடையவனான பிறகு உபயவிபூதியும் உங்களுக்கு அளிப்பேன் என்று சொல்லுகிறாள்.

அவனுக்கும் நமக்கும் உள்ள ஸாரஸ்யத்தை, பிரிக்கமுடியாத உறவைச் சொன்னால் படைத்த பரப்பில் மூழ்கிக் கிடக்கிற அவன் வருவான்.

என்மின்னு நூல் மார்பன் என் கரும்பெருமான் என் கண்ணன்
தன்மன்னு நீள்கழல்மேல் தண்துழாய் நமக்கன்றி நல்கான்
கன்மின்கள் என்றும்மையான் கற்பியாவைத்த மாற்றம் சொல்லி
சென்மின்கள் தீவினையேன் வளர்த்த சிறு பூவைகளே (6.8.6)

ஒளி பொருந்திய பூணூல் தரித்தவன், கரிய திருமேனியனான என் கண்ணன் தன் திருவடிமேல் திருத்துழாயை அவன் அடியவளான எனக்கன்றித் தரமாட்டான். இந்த ஸாரஸ்யத்தை நினைவு படுத்தவே, அவன் படைத்த பரப்பை மறந்து வருவான். நீங்கள் அவனை பரமபதத்தில் கண்டு என் வார்த்தையைச் சொல்லுங்கள் என்கிறாள்.

தூமது வாய்கள் கொண்டுவந்து என் முல்லைகள் மேல்
துமபிகாள்
பூமது உண்ணச் செல்லில் வினையேனைப் பொய் செய்த
கன்ற
மாமதுவார் துழாய்முடி வானவர் கோனைக் கண்டு
யாமிதுவோ தக்கவாறு என்ன வேண்டும் கணமர் நுங்கட்கே
(7.8.4)

மலர்களின் மேலிருந்து மதுவையருந்தி என் குழல் மேல் அமர்ந்த தும்பிகளே என்னிடம் பொய்யைச் சொல்லி என்னை விட்டு அகன்ற தேன் பெருகும் துழாய் சூடிய முடியையுடைய நித்ய ஸூரிகள் நாயகனைக் கண்டு நீ செய்தது தகுமா என்று கேளுங்கள். வானவர்கோன் என்பதால் பரமபதத்திலிருக்கும் பரத்வ ஸ்வரூபத்தில் தூது விட்டாராயிற்று. அங்கும் காணமுடியா விட்டால் என்ன செய்வது. அவன் ஸகல சேதனாசேதனஙகளிலும் அந்தர்யாமியாக இருக்கிறான். அதனால் இந்தப் புவனமுழுதிலும் எங்குச் சென்றாகிலும் கண்டு அவனைக் கண்டு என் நிலையைச் சொல்லுங்கள் என்கிறார். ஆக பரத்வம் அந்தர்யாமித்வம் இரண்டிலும் தூது விடுகிறார்.

**நான்காவது தூது**

ஒன்பதாம் பத்து ஆறாம் திருவாய்மொழியில் நெஞ்சம் உருகி அவனை முற்றும் அனுபவிக்க ஆசைப் பட்டு திருக்காட் கரையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் பெருமைகளைச் சொல்லுகிறார். நான் அவனை முழுவதுமாக அனுபவிக்க வேணும் என்று முற்பட்டேன். ஆனால் அவன் என்னை முந்திக் கொண்டு என்னை முழுமையாக அனுபவித்தான். இந்த சீல குணத்தை என்னவென்று சொல்வேன் என்கிறார்.

வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்
பாரித்து தானென்னை முற்றப்பருகினான்
காரொக்கும் காட்கரையப்பன் கடியனே (9.6.10)

இந்த ப்ரத்யக்ஷ ஸமானமான மானஸானுபவம் நேரே வேண்டுமென்று விரும்ப முதலில் அடைந்த மானஸானுபவமும் போயிற்று. ஆற்றாமை அதிகமாகி பெண்ணிலையடைந்து மீண்டும் பக்ஷிகளை தூது விடுகிறார். எங்கானலகங்கழிவாய் என்கிற ஒன்பதாம் பத்து ஏழாந்திருவாய் மொழியில், எம்பெருமான் வரத்தாழ்த்தற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தார். திருமூழிக்களம் என்கிற திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானை நினைக்கிறார். எம்பெருமானின் அடியார்கள் அங்கு நிறைந்திருக் கிறார்கள். அவர்களோடு பரமபதத்தில் நித்ய ஸூரிகளோடு இருப்பதுபோல் அங்கு இருக்கிறார். பெண் குருகே! நீ உன் இணையோடு பிரியாது இருக்கிறாய். நானோ அவனைப் பிரிந்து வாடுகிறேன். என் நிலை கண்டு என் உறவினரும் பழிக்கிறார்கள். அந்த எம்பெருமானும் என்னை மறந்தார். எம்பெருமானைப் பிரிந்து நான் இங்கு வாழும்போது நீங்கள் கூடியிருப்பது எங்களுக்கு துக்கத்தை அதிகரிக்கிறது. திருமூழிக்களத்திற்குப்போய் எம்பெரு மானை "நீர் உம்மடியாரோடு கூடியிருக்கிறீர். அங்கு ஒருத்தி உங்கள் ஸௌந்தர்யத்தை கண்டு அனுபவிக்க வேணுமென்று இருக்கிறாள். சிவந்த தாமரை மலரின் இதழ் போன்ற உன் கண் கால் அதரங்கள் இவற்றையும் அந்த தாமரையின் இலை போன்ற பசுமையான திருமேனியும் உடைய உம்மையே எண்ணியிருக்கிறாள்" என்று அவருக்கு நினைவுபடுத்துங்கள்.

நுமரோடும் பிரியாதே நீரும் நும் சேவலுமாய்
அமர்காதற்குருகினங்காள் அணி மூழிக்களத்துறையும்
எமராலும் பழிப்புண்டு இங்கு என் தம்மாலிழிப்புண்டு
தமரோடங்குறைவார்க்கு தக்கிலமே கேளீரே (9.7.2. )

தக்கிலமே கேளீர்கள் தடம் புனல் வாயிரைதேரும்
கொக்கினங்காள் குருகினங்காள் குளிர்மூழிக்களத்துறையும்
செக்கமலத்தலர்போலும் கண்கைகால் செங்கனிவாய்
அக்கமலத்திலைபோலும் திருமேனியடிகளுக்கே (9.7.3)

தகவன்றென்றுரையீர்கள் தடம் புனல் வாயிரைதேர்ந்து
மிகவின்பம்படமேவும் மென்னடையவன்னங்காள்

மிகமேனிமெலிவெய்தி மேகலையுமீடழிந்து என்
அகமேனி ஒழியாமே திருமூழிக்களததார்க்கே (9.7.10)

தடாகத்தில் இரைதேடி மிக இன்பமாக உள்ள மென்மையான நடையுடைய அன்னங்களே என்மேனி மிகவும் மெலிந்து நான் அணிந்த மேகலை நழுவியிருக்க முடிந்துபோகும் நிலையில் என்னை அனாதரிப்பது உமக்குத் தக்கதன்று என்று திருமூழிக் களத்தாற்குச் சொல்லுங்கள். இப்படி திருமூழிக்களத்தில் தன் அடியார்களுடன் கூடியிருப்பதனால் மறந்துபோன அவன் ஸௌந்தர்யத்தை அவனுக்கு நினைவுறுத்தி என் நிலையைச் சொல்லுங்கள் என்று அர்ச்சாவதாரத்தில் விட்ட தூதாக நான்காவது தூது அமைந்திருக்கிறது.

வேறு வேறு தூதுப் பதிகங்களை ஒரு சேர அனுபவித்தப்பின் மற்றப் பாசுரங்களை ப்ரபந்தத்தில் உள்ள வரிசைப்படி அனுபவிப்போம்.

**ஆற்றாமைசொல்லி**

ஆழ்வார் எம்பெருமானை அனுபவிக்கப்பெறாத தாபத்தினால் தாம் படும் பாட்டை நேராகச் சொல்லாமல் தம்மைச் சுற்றிலும் உள்ளவையெல்லாம் பெருமானைப் பிரிந்து துக்கப்படுகின்றன என்கிறார்.

முந்தின திருவாய்மொழியில் மணியை வானவர் கண்ணனை தன்னதோர் அணியை என்று எம்பெருமானுடைய ஸௌந்தர் யத்தையும் மேன்மையையும் வடிவழகையும் சொல்லி அவ்வனுபவம் பாஹ்ய ஸம்ஶ்லேஷமாக வேணுமென்று அபேக்ஷை உண்டாயிற்று. அது கிடைக்காததால் ஏற்பட்ட ஆற்றாமையாலேஅருகிலிருந்த உத்யானத்திற்குப்போய் பார்க்க அங்கு உள்ள பதார்த்தங்களெல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப் பிரிந்து நோவு படுகிறதாக எண்ணி அவற்றுக்குமாகத் தான் படுகிற துக்கத்தைப் பாசுரமாக பிராட்டிதசையில் அருளிச் செய்கிறார்.

நாரையாகில் வெளுத்திருக்கையும் அன்றிலாகில் வாய் நெகிழ்ந்த வாறே கதறுகையும் கடல் அலைகள் அனக்ஷரரஸமாக ஓசையிடு

வதும் காற்று எப்போதும் வீசிக் கொண்டிருப்பதும் மேகம் நீராய்ப் பொழிகையும் இருளில் எதுவும் காணமுடியாமையும் கழியாகில் கடலை நோக்கி ஏறுவதும் வடிவதுமாயிருப்பதும் இவை யெல்லாம் இவற்றுக்கு உள்ள இயற்கையான ஸ்வபாவம் என்பதை நினையாமல் இவையும் தம்மைப்போல் பகவத் விஸ்லேஷத்தில் நலிவு படுவையாகக் கொண்டு அவற்றுக்குமாக வருந்துகிறார். இத்திருவாய்மொழியில்.

தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு எம்
ஆற்றாமை சொல்லி அழுவோமை நீ நடுவே
வேற்றோர் வகையில் கொடிதாய் எனையூழி
மாற்றாண்மை நிற்றியோ வாழிகனையிருளே (2.1.7).

எம்பெருமான் நாராயணனுக்கு எங்களுடையது என்று எண்ணியிருந்த நெஞ்சை இழந்தோம். எங்களுடைய ஆற்றாமையை வாய்விட்டுச் சொல்லி அழுகின்ற எங்களைப்பற்ற நீ நடுவே புகுந்து சத்ருக்களும் இரங்கும் எங்கள் நிலையைக் கண்டும் இன்னமும் விரோதமாக இருப்பாயோ? நோவுபட்டிருக்கிற எங்களை உன் துக்கத்தைக் காட்டி மேலும் நலிகிறாய்.

**கவராதவை விட்டு**

இதற்கு முந்தின திருவாய் மொழியில் (சீலமில்லா) கேட்டார் நெஞ்சு உருகும்படி எம்பெருமானைக் கூப்பிட்டார். ஆனாலும் அவன் முகம் கொடாமையாலே ப்ராப்தனும் சீலனும் விரோதி நிரஸன சீலனுமானவன் எனக்கு என் ஆத்மாத்மியங்களில் இன்னும் பற்றுதல் இருப்பதாக நினைக்கிறான் போலும். அப்படியானால் அவனுக்கு வேண்டாத நானும் என் உடைமையும் எனக்கும் வேண்டா என்று இவற்றில் தனக்குப் பற்று இல்லாமையை மகள் பேச்சாகப் பேசுகிறார்.

ஏறாளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும்
கூறாளும் தனி உடம்பன் குலங்குலமா அசுரர்களை
நீறாகும்படியாக நிருமித்துப்படைதொட்ட
மாறாளன் கவரா மணிமாமை குறைவிலமே (4.8.1)

ஈசுவரனாக தன்னை அபிமானித்திருக்கும் ருத்ரனும் பலவித ஸ்ருஷ்டி ஸாமர்த்யம் உடைய நான்முகனும் பெரிய பிராட்டியாரும் தங்களுக்கு இருப்பிடமாக நினைந்திருக்கும் அப்ராக்ருதமான திருமேனியை உடையவனும் கூட்டம் கூட்டமாக அஸுரர்களை அழித்தவனுக்கு அபிமதமில்லாத என் தேகத்தின் ஒளி எனக்கும் வேண்டாம்.

இவ்வாறே மடநெஞ்சம் நிறைவு, தளிர் நிறம், அறிவு, கிளரோளி வரிவளை, மேகலை, உடம்பு, உயிர், என்று லோகத்தார் விரும்பும் எதுவும் அவனுக்கு அபிமதமில்லாவிட்டால் தனக்கும் அவை வேண்டாம் என்கிறார்.

இங்கு ஆளவந்தாருடைய ஸ்தோத்ர ரத்ன ஸ்லோகம் அனுஸந்திக்கத் தக்கது.

न देहं न प्राणान् न च सुखमशेषाभिलषितं
न चात्मानं नान्यत् किमपि तव शेषत्वविभवात् ।
बहिर्भूतं नाथ क्षणमपि सहे यातु शतधा
विनाशं तत् सत्यं मधुमथन विज्ञापनमिदम् ॥

ஓ மதுஸூதனனே உனக்கு சேஷமாயிருக்கும் தன்மையில்லாத தேகமோ ப்ராணனோ விரும்பக்கூடிய எல்லா ஸுகங்களும், ஏன் என் ஆத்மாவும் வேறு எதுவுமோ கூட நான் ஒரு க்ஷணமும் ஸகித்திருக்க மாட்டேன். இவையெல்லாம் பல கூறாக நாச மடையட்டும். இது ஸத்தியம். இதே என் ப்ரார்த்தனை.

**இரைக்கமடலெடுத்து**

முந்தின திருவாய்மொழியில் லோகமாகத் திருந்தி கலியே போயிற்று என்று ஆனந்தப்பட்டார். மேலும் அவனை நேர்கொடு நேர் அனுபவிக்கவேணுமென்று ஆசைப்பட்டு அது கிடைக்காமை யால் ஒரு பிராட்டி தன்மையையடைந்து நான் மடலெடுப்பேன் என்று சொல்கிறார்.

மடலூர்கையாவது விரும்பிய விஷயத்தைப் பிரிந்த ஆற்றாமையால் அவ்விஷயத்தை ஒரு படத்தில் எழுதி அதைப் பார்த்துக்கொண்டு

பனைமடலை குதிரையாகக் கொண்டு பிரிந்தது முதல் போகோபகரணங்கள் நெருப்புப் போல் வாட்ட மயிரை விரித்துக் கொண்டு திரிந்தால் மற்றையோர் அவளிடம் அனுதாபம் கொண்டு சேர்த்து வைப்பார்கள் இல்லையாகில் உயிரை விடுதல் என்ற ஸாஹஸப்ரவ்ருத்தி. தமிழ் இலக்கியத்தில் அகத்துறையில் மடலூர்தல் பற்றி சொல்லப்படுகிறது. மடலூறும்போது தன்னைப் பிரிந்தவரின் குணங்களை அழிக்கப்புகுதல். இந்த நாயகன் ஸர்வரக்ஷகன் என்பது பொய் அவன் என்னை ரக்ஷிக்கவில்லை என்று அவனுடைய ரக்ஷகத்வத்தை அழித்தால் அவனையே அழித்தது போலத்தான்.

நான் மடலெடுப்பேன் அவன் ஸ்வரூபத்தை அழித்தும் மடலெடுப்பேன் என்று தோழிக்கு அறிவிக்க ஸர்வேச்வரன் இருக்கமாட்டாமல் வந்து முகங்காட்டி தானும் ஸத்தைபெற்று இவளையும் தரிக்கச்செய்தான் என்று இத்திருவாய்மொழியை முடிக்கிறார்.

யாமடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம்
யாம் மடமின்றி தெருவுதோறயல் தையலார்
நாமடங்காப்பழி தூற்றி நாடு மிரைக்கவே (5.3.10)

ஏதோ விதத்தில் ஸ்திரீத்வத்துக்குத் தகுந்த அடக்கமின்றி தெருவு தோறும் சென்று அயல்பெண்கள் விடாமல் பழி தூற்றினாலும் உலகமுற்றும் பெருங்குரலில் கூப்பிடும்படி நான்மடல் ஊர்ந்தேயாகிலும் திருவாழியையேந்திய வடிவழகுடைய திருமேனியை உடையவன் எம்மை வசீகரித்தவனுடைய தூய்மையான இதழ்களுடைய ஶ்ரமஹரமானதும் காண்பதற்கு இனிதானதுமான திருத்துழாயைஅவன் தர நாம் வாங்கி நம் தலையில் சூடுவோம்.

**கண் புதையப் போக்கற்று**

மாசறுசோதியில் மடலூர்வன் என்று சொன்னவர் மடலூரும்போது அபிமத விஷயத்தைப் படத்திலே எழுத வேணும் அது முடியாதபடி

இருள் சூழ்ந்தது. சொன்னபடி மடலூர முடியாமல் போக, ஸர்வரக்ஷகனான எம்பெருமான் குணங்களை அனுஸந்தித்து மிகுந்த ஆற்றாமை அடைந்தாள். அசோகவனத்தில் இருந்தபோது ப்ராணனை விடுவதே மேல் என்று நினைத்த ஸீதாப்பிராட்டி

विषस्य दाता नहि मेस्ति कश्चित शस्त्रस्य व राक्षसवेश्मनि

என்று பிராணனை விடுவோம் என்றால் விஷமோ வேறு தன்னை மாய்த்துக்கொள் உபகரணங்களை கொடுப்பவர் இந்த ராக்ஷஸர் இருப்பிடத்தில் யாரும் இல்லை என்கிறாள். அதுபோல் ஆழ்வாரும் தம்மை முடித்துக்கொள்ளப் பார்த்து அது கூடாமல் போயிற்று. இவர் தாமதத்தைப் பொறுக்காமல் இரவு நீள்கிறதை எண்ணிக் கூப்பிட்ட நாயகி பாசுரத்தால் அருளிச் செய்கிறார்.

பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடுமால்
முன்னின்றிராவூழி கண்புதைய மூடிற்றால்
மன்னின்ற சக்கரத்து எம்மாயவனும் வாரானால்
இன்னின்ற நீளாவி காப்பாரார் இவ்விடத்தே (5.4.6)

தொடர்ந்து உடன் வருகிற காதல் நோய் என் நெஞ்சை மிகவும் அழிக்கிறது. முன்னே இருந்து கொண்டு இரவு ஊழிக்காலம் போல் நீண்டு கண்ணை மறைக்கிறது. இப்படி காதலும் இரவும் சேர்ந்து நலியும்போது ஆச்ரித ரக்ஷணத்துக்காக எப்போதும் திருவாழியைக் கையில் கொண்டிருக்கும் ஆச்சரிய சேஷ்டிதங்களை உடையவன் வரவில்லை. என்னுடைய நித்யமான இந்த ஆத்ம வஸ்துவை இன்னிலையில் யார் ரக்ஷிப்பார் என்று கேட்கிறார்.

**உருநெஞ்சுள்ளொழ**

மாசறு சோதியில் மடலெடுப்பேன் என்ற பிறகு ஊரெல்லாம் துஞ்சியில் ஸூர்யோதயம் வராததால் வெறுத்தார். மாசறு சோதியில் ப்ராப்யத்வரையாலே அத்யவஸாயம் (அவன் வந்து கைக்கொள்ளவேணும் ஸ்வப்ரயத்னம் தகாது என்பது) தளர்ந்தது. ஊரெல்லாம் துஞ்சியில் த்வரையும் கலங்கினபடி. இப்போது விடிந்த பிறகு பந்துக்களெல்லாம் எழுந்திருந்து இவளுடைய துணிவு கண்டு ஸந்தோஷமடைபவர்களும் தோழிமா

ரென்னையுமக்காசையில்லை என்னவேண்டும்படி ஹிதஞ்சொல்லி மலைப் பாருமாகப் பெற்றார். இப்படிபோது விடிந்ததால் ஒரு தரிப்பும் அவனை அனுபவிக்க பெறாமையால் ஒரு ஆற்றாமை யுமாக ப்ரீதி அப்ரீதிகள் ஸமமாகச் சென்றன. இங்கு நம்பிள்ளை ஸ்ரீராமாயணத்திலிருந்து சில உபமானங்கள் காட்டுகிறார். சித்ரகூடத்தில் பரதன் ப்ரார்த்தனையை பெருமாள் ஏற்கவில்லை ஜாபாலியும் வஸிஷ்டரும் சொன்ன ஸமாதானங்களும் அவருக்கு ஏற்புடையதாக இல்லை. இதைக் ண்ட நகர ஜனங்கள் உகப்பதும் வெறுப்பதும் செய்தார்கள். ரக்ஷகனானவன் தான் எடுத்துக் கொண்ட காரியம் முடிய மாற மாட்டேன் என்று சொன்னது நம்முடைய ரக்ஷணத்திற்கும் பொருந்துமே. நமக்கு அவன் ரக்ஷிக்கை நிச்சயம் என்று உகந்தும் இவனைப் பிரிந்து பதினாலு ஆண்டுகள் கழிய வேண்டுமே என்று வெறுக்கவும் செய்தார்கள். திருவடி அசோகவனத்தில் பிராட்டியைத் தொழுது நின்றபோது இவளுடைய அபிமதம் நிறைவேற்ற நம்பராக்ரமத்தைக் காட்ட ஒரு வாய்ப்பு வந்ததே என்று உகந்தும் இவர் ராமனைப் பிரிந்து இப்படி இருப்பதே என்று வெறுப்பதும் செய்தான்.

கழியமிக்கதோர் கதாலளிவளென்று அன்னை காணகொடாள்
வழுவில் கீர்த்தித்திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்
    தினுள்ளே
எழுவதோருரு என்னெஞ்சுள்ளெழும் ஆர்க்கும் அறிவரிதே
(5.5.10)

கழியமிக்கதோர் காதலென்று விஸஜாதியமான காதல். லோகத்தில் துக்கத்தின் தீவிரம் நாள் செல்ல செல்லக் குறையும். ஆழ்வாருடைய தாபமோ நாளும் அதிகரித்துச் செல்கிறது. குறைவற்ற கீர்த்தியை யுடைய குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் நம்பியை ஸேவித்த பிறகு வெள்ளத்தில் இறங்குவார் கைகோர்த்துக் கொண்டு இறங்கும்படியாக தேஜஸின் நடுவே பிரகாசிக்கிற அவன் அழகு நித்ய ஸூரிகள் நடுவே தோன்றுவதுபோல் என் நெஞ்சுக்குள் ப்ரகாசிக்கிறது நாங்கள் கண்டதில்லையே என்றால் தன்யத்னத் தால் காண்பார்க்கும் த்வரையில்லாதார்க்கும் அறியவொண்ணாது.

### கூடுநாள் தேடி

எட்டாம் திருவாய்மொழியில் (ஆராவமுதே) சரணம் புகுந்தும் தன் விருப்பம் நிறைவேறாமல் போகவும் ஆழ்வார் திருவல்லவாழ்போகக் கிளம்பி அங்கு அருகில் போகவும் முடியாதபடி ஆக தம் துக்கத்தை மகள் பாசுரமாக வெளியிடுகிறார்.

மானேய் நோக்கு நல்லீர் வைகலும் வினையேன் மெலிய
வானார் வண்கமுகும் மது மல்லிகை கமழும்
தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழுறையும்
கோனாரை அடியேன் அடிகூடுவது என்று கொலோ (5.9.1)

மானைப்போன்ற கண்களையுடையராய் வானளாவிய கமுகும் தேனொழுகும் மல்லிகையும் மணக்கும் திருவல்லவாழில் நித்யவாஸம் பண்ணுகிற சேஷியான எம்பெருமானை அவருடைய மேன்மைக்குத் தோற்று பாபியான அடிமையான நான் அவன் திருவடிகளிலே என்று கூடுவனோ? கோனார் என்பது நாராயண சப்தார்த்தம் அடியேன் என்பது ப்ரணவார்த்தம் அடிகூடுவது என்று கொலோ என்பது சதுர்த்யர்த்தம் என்று நம்பிள்ளை நிர்வகிக்கிறார்.

இவ்வாறே அடிநீறு அடியோங்கொண்டு சூடுவதே (2ம் பாட்டு) காண்டுங்கொல் நிச்சலுமே (3ம் பாட்டு) என்னலங்கொள்சுடரை என்றுகொல் கண்கள் காண்பதுவே (5ம் பாட்டு) காண்பதெஞ்ஞான்றுகொலோ (6ம் பாட்டு) பாதங்கள் மேலணி பூந்தொழக்கு கூடுங்கொல் (7ம் பாட்டு) இவ்வாறு பலவாக தாம் எம்பெருமானைக் கூடுவது எந்தநாளோ என்று சொல்கிறார்.

### தாழ்ந்ததுக்கு ஊடி.

ஆழ்வார் ஸம்ஸார பயத்தாலும் பகவத் ப்ராவண்யத்தாலும் இது கிடைக்காவிட்டால் தரியாமையாலும் பகவத் விஷயத்தில் ப்ரவேசித்தார் எல்லாருடைய படியுமுடையராயிருப்பார். பொய்ந்நின்ற ஞானமும் என்கையாலே பத்தர் படியுடையரா யிருப்பார் இன்னின்ற நீர்மை இனியாமுறாமை என்று அதில் பொருந்தாமையால் முமுக்ஷுக்கள் படியுமாயிருந்தது. வழுவிலா அடிமை

செய்யவேண்டும் என்கையாலே கைங்கர்யமே தேகயாத்ரையாவதால் முக்தர்படியும் நின்னலால் இலேன்ககாண் என்கையாலே நித்யரோடொக்கச்சொல்லும்படி இருக்கிறார். ப்ரணயரோஷத்தாலே பிராட்டியோடு வாசியற இருக்கிறார். பெருமாள் பதினாலாண்டு வனவாஸம் புறப்பட ஸீதாப் பிராட்டியை அயோத்தியிலேயே இருக்கும்படி சொல்கிறார். பிராட்டி பிரணயரோஷத்தை வெளிப்படுத்துகிறார்.

किं त्वां मन्यत वैदेह: पिता मे मिथिलाधिप:
रामजामातरं प्राप्यस्त्रियं पुरूषविग्रहम)

ஆண் உருவில் உள்ள பெண் என்று அறியாமல் என் தந்தை உங்களை மருகனாக ஏற்றார்) என்கிறாள்.

மாசறு சோதியே தொடங்கி மிகுந்த க்லேசப்பட்டு நாலு சரணம் புகுந்து அவ்வளவிலும் அவன் முகங்காட்டாததால் தூது விட்டுப் பிறகு தோழிமாரோடு சேர்ந்து இனி அவன் வந்தாலும் அவனுக்கு முகங்கொடுத்தல், வார்த்தை சொல்லமாட்டோம் என்று ஸங்கல்பித்து ஒரு பொழிலிலே அழகிய மண்டபத்திலே இருந்தாள். அவன் அவள் தூதுக்குச் செவி சாய்த்து வந்தான்.

அவள் இவள் இருப்பிடம் வர, யதேச்சையாக பெண்களுடைய பந்தும் கழலும் இவன் காலிலே பட, அவற்றை எடுத்துக் கொண்டு தன்வ்யாமோகம் தோற்றும்படி அவற்றை கண்ணிலே ஒற்றிக் கொள்வது தலையிலே வைத்துக் கொள்வதுமாக அவன் நின்றான். ஆழ்வார் அவன் தாழ்த்ததுக்கு ஊடிப் பாடிய பாசுரம்.

மின்னிடை மடவார் நின்னருள் சூடுவார் முன்புதானதஞ்சுவன்
மன்னுடை இலங்கை அரண் காய்ந்த மாயவனே
உன்னுடைய கண்டாயம் நானறிவன் இனி அது கொண்டு
செய்வதென்
என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ (6.2.1)

இவள் தன் லீலோபகரணங்களையும் மறையவைத்து தோழிமாரையும் விமுகைகளா இருக்கும்படி செய்து, இவள் பந்தும் கழலும் அவனிடம் கிட்ட அவை எங்களது அவற்றைத் தந்துபோ என்று அவனோடு உறவற வார்த்தை சொல்லுகிறாள்.

இப்படி பாடலாகவே பேசி முடிவில்

நின்றிலங்கு முடியினாய் இருபத்தொர்கால் அரசு களைகட்ட
வென்றி நீள்மழுவா வியன் ஞாலம் முன் படைத்தாய்
இன்றிவ்வாயர் குலத்தை வீடுய்யத்தோன்றிய கருமாணிக்கச் சுடர்
நின் தன்னால்நலிவேபடுவோம் என்றும் ஆய்ச்சியோமே
(6.2.10)

இருபத்தொரு முறை க்ஷத்திரியர்களை அழித்தவனே ப்ரபஞ்சத்தைப் படைத்தவனே வெற்றியை தர்சிப்பிக்கும் திருவபிஷேகத்தை உடையவனே இந்த ஆயர் குலத்தை உயர்த்த வந்த கறுத்த ஒளி வீசும் மாணிக்கமே உன்னால் நாங்கள் துன்பப்படுகிறோம். உன்னைப் பிரிந்து நாங்கள் படும் துயர் நீ அறியமாட்டாய் என்று கூறி ஸமாஹிதராய் அவனோடு கூடி மகிழ்கிறார்.

இந்தத் திருவாய்மொழிக்கு இரண்டு படியாக அவதாரிகை அருளிச் செய்கிறார். கீழ்திருவாய்மொழியில் இட்டகாலிட்டகை என்னும் படி இவள் மோகித்துக் கிடக்க, பிறகு தானே எழுந்திருந்து பேசும் பாசுரமாயிருக்கிறது. இதற்குக் காரணம் தாயார் செய்த எம்பெருமானுடைய குண கீர்த்தனம். இதனால் இவள் மோகமும் தெளிந்து பிரிவுத் துயரும் அதிகரிக்க அருகில் தென் திருப்பேரையிலிலே வீற்றிருந்த மகரநெடுங்குழைக்காதருடைய ரூப குணங்களை நினைத்து அங்கு செல்கிறேன் என்று முயற்சிக்க முன்பு போலவே தோழியரும் தாய்மாரும், நீ இப்படிச் செய்வது உன் ஸ்த்ரீத்வத்திற்குத் தகுதியல்ல என்று தடுக்க இவள் நீங்கள் சொல்லுகிறவற்றால் என்னைத்தடுக்க முடியாது. நானே போக வேண்டாமென்றால் நீங்கள் என்னை அங்கு கொண்டு சேருங்கள் என்று தன் துணிவை வெளிபடுத்துகிறாள்.

பிள்ளான் பணிக்கும் நிர்வாகம். கீழே முகில்வண்ணன் அடியை இவள் அணுகி அடைந்தனள் என்று சொல்லுகையாலே நெடுங்காலம் பெரியபெருமாளுடன் கூடியிருந்ததால் இவள்

தரித்திருப்பதற்கு ஒரு பிரிவு அவசியம் என்று பெருமாள் பிரிய, பிறகு அதனால் உண்டான பிரிவுத் துயர் இத்திருவாய்மொழியாக வெளிப்படுகிறது. ஸீதாப்பிராட்டி, समाद्वादशतत्राहं என்று பன்னிரண்டு ஆண்டுகள் அயோத்தியிலே भुंजानामानुषान् भोगान् என்று எல்லா ஸுகங்களையும் அனுபவித்துப் பின் காட்டிற்குச் சென்றும் பதிமூன்று ஸம்வத்ஸரங்கள் ராமனோடு சேர்ந்து அனுபவித்த பிறகு பத்து மாதம் பிரிந்திருந்து மீண்டும் ராவண வதத்திற்குப் பின் சேர்ந்து பட்டாபிஷேகம் முடிந்து பிரிவு என்பதே இல்லாமல் இருந்த காலத்தில் தானே விரும்பி காட்டிற்கு போனதும், அங்கே ராமனோடு உலாவிய இடம் இது என்று பழையவனவாஸ அனுபவத்தை மீண்டும் பெற்றது போல இந்தத்திருவாய் மொழி அமைந்திருக்கிறது.

அவனே உபாயமானபிறகு இந்தப்ராவண்யம் ப்ராப்யத்தில் த்வரையினால் ஏற்பட்டதனால் இது ஸ்வப்ரவ்ருத்தியாகவோ உபாயாந்தர அனுஷ்டானமாகவோ ஆகாது. கங்குலும் பகலில் தாயார் அதிக ஈடுபாடு உபாய கோடியில் சேர்ந்ததாகுமோ என்று அஞ்சுகிறாள் இங்கு பெண்ணின் கருத்தாக உபாயம் அவனேயானால் ப்ராவண்யம் ஸ்வரூபமல்லவா என்று பெண் பேச்சாக வருகிறது.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்
தாமரைக்கண்ணன் என்னெஞ்சினூடே
புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீரென்
சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்
வெள்ளைச்சுகமவன் வீற்றிருந்த வேதவொலியும்
விழாவொலியும்
பிள்ளைக்குழாவிளையாட்டொலியும்
அறாத்திருப் பேரையில் சேர்வன் நானே (7.3.1)

என்னுடைய தாபம் தெரியாதே என்னை விலக்க முயற்சிக்கிற அன்னையர்களே வெண் சங்கும் சக்கரமும் கையிலலேந்திய தாமரையை ஒத்த கண்ணையுடையவன் என் இதயத்துக்குள்ளே கருடாழ்வானை நடத்திக்கொண்டு வருகிற ப்ரகாரத்தைப் பாருங்கள். இந்த அனுபவத்தை என்னால் விவரித்துச் சொல்ல

முடியாது. பகவதனுபவத்தால் அளவற்ற சுகமுடைய என் நெஞ்சில் எப்படி ப்ரகாசிக்கிறான். வேதவொலியும் உத்ஸவத்தின் கோஷங்களும் அவனுடைய அனுபவத்தை விளையாட்டாக பெற்ற சிறு பிள்ளைகளின் திரளின் ஒலியும் ஒய்வின்றி ஒலிக்கிற தென் திருச்பேரைக்கு நான் சென்று சேர்வேன்.

இழந்த என் மாமை திறத்துப்போன
என்னெஞ்சினாரும் அங்கேயொழிந்தார்
உழந்தினியாரைக்கொண்டு என் உசாகோ
ஓதக்கடலொலி போல எங்கும்
எழுந்தவேதத்தொலி நின்றோங்கு
தென் திருப்பேரையில் வீற்றிருந்த
முழங்கு சங்கக்கையன்மாயத்தாழ்ந்தேன்
அன்னையர்கள் என்னை என்முனிந்தே (7.3.4)

ஏதேனும் ஒன்றைக் கொண்டு வருந்தியாகிலும் போது போக்கலாகாதோ இப்படி செய்யலாமோ என்று அன்னைமார் கேட்க, இழந்த என் நிறத்தை மீட்க என் நெஞ்சம் அவனிடம் போய் அங்கே என்னை மறந்து அவனோடே நின்று விட்டது. இனி ஆரைத்துணை கொண்டு எத்தைச் சொல்லி போதுபோக்குவேன் வேதத்வனிபோலே எப்போதும் முழங்குகிற ஸ்ரீபாஞ்சஜன் யத்தாலேயலங்கரிக்கப்பட்ட திருக்கையை உடையவன் அழகில் மயங்கினேன்.

பேரெயில் சூழ்கடல்தென்னிலங்கை செற்ற
பிரான் வந்து வீற்றிருந்த
பேரயிற்கேபுக்கென்னெஞ்சம் நாடிப்
பேர்த்துவரவெங்கும் காண மாட்டேன்
ஆரையினி இங்குடையம் தோழீ
என்னெஞ்சம் கூவவல்லாருமில்லை
ஆரையினிக்கொண்டு என் சாதிக்கின்றது
என்னெஞ்சம் கண்டதுவே கண்டேனே (7.3.7)

தன்னெஞ்சுதரிக்கைக்கு வழிதேடி திருப்பேரையிலே புகுவேன் என்கிறாள். கடல் சூழ்ந்த பெரிய மதிளை உடைய திருப்பேரையில்

புகுந்த என்னெஞ்சம்திரும்பிவரக்காணேன். நாயகன் வரும் வரை அவனுக்காக பழைய விருத்தாந்தங்களை எண்ணி தரித்திருக்க வேண்டாமோ என்று தோழி கேட்க என் நெஞ்சு இங்கு இல்லாதபோது இனி யாருண்டு நெஞ்சை மீட்க உன்துணைத் தவிர யாரிருக்கிறார்கள்? யாரைக் கொண்டு இனி எதை சாதிப்பது அதனால் மீளாதே நெஞ்சு போன வழியே போகப்பார்த்தேன் என்கிறாள்.

**சூழவும் பகை முகம் செய்ய**

முந்தின திருவாய்மொழியில் "வந்தெய்துமாறியேன் மல்கு நீலச்சுடர் தழைப்பச் செஞ்சுடர் சோதிகள் பூத்து ஒருமாணிக்கம் சேர்வதுபோல் அந்தரமேல் செம்பட்டோடு அடி உந்தி கைமார்பு கண்வாய் செஞ்சுடர்ச் சோதி விடவுறை என் திருமார்பனையே" என்று அவன் வடிவழகை அனுஸந்தித்தார். இந்த அனுபவம் ப்ரத்யக்ஷமாகாமல் மானஸானுஸந்தானமும் போய் மிகுந்த துக்கத்தினால் எந்த அவயவங்களின் அழகில் ஆழங்கால்பட்டு ஆனந்தமடைந்தாரோ அந்த அவயவங்களே தம்மை நலிகின்றது போல் பேசுகிறார். கலவியின் போது ஸ்வர்கத்தை அளிக்கும் போக்யபதார்த்தங்களே பிரிவில் விரோதிகளாக உணர்வது எப்பொழுதும் உள்ளதே. திருவாய்மொழி முழுவதும் இந்த உணர்வு ஆங்காங்கு இவர்க்கு ஏற்பட்டாலும் இத்திருவாய்மொழியில் இது இவர்க்கு உருவெளிப்பாடாக அமைந்தது எங்ஙனேயோவில் ஆழ்வாருக்கு ப்ரித்யப்ரீதிகள் ஸமமாகச் செல்லுகின்றன. இதில் அப்ரீதியே மேலெழுந்திருக்கிறது.

ஏழையராவியுண்ணும் இணைக்கூற்றங்கொலோ அறியேன்
ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள்கொலோ அறியேன்
சூழவும் தாமரை நாண் மலர்போல் வந்து தோன்றும் கண்டீர்
தோழியர்காளன்னைமீர் என் செய்கேன் துயராட்டியேனே

(7.7.1)

பெண்களுடைய ப்ராணனைக் கவரும் இரட்டை ம்ருத்யுவோ சொல்ல முடியவில்லை. அன்றிவிலக்ஷண ஸ்வபாவனாய் விதேய னாய் உபகாரகனான கண்ணனுடைய திருக்கண்களோ தாமரையின் செவ்விப்பூப்போல வந்து தோன்றுகிறது. தோழியர்களே

அன்னைமார்களே மிகுந்த க்லேசத்தையுடைய நான் என்ன செய்வேன், எம்பெருமான் மூக்கு கற்பகத்தின் கொடி போலவோ கொழுந்து போலவோ தோன்றி நலிகின்றது என்கிறார். தொண்டைவாய் நன்கு பழுத்த கனியோ அல்லது தன்னுடைய வினைப்பயனோ என்றும் புருவமிரண்டும் அவைகளின் மேல் வளையும் கருத்த வில்லோ அன்றி மன்மதன் வில்லோ என்றும் அவன் முறுவல் பிரகாசிக்கிற வெளுத்த மின்னலோ அன்றி என் ஆத்மாவை நலிகிற முத்தோ என்றும் அபலைகளுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் உய்விடம் எது என்று அவன் குண்டலம் தளிர்க்கின்ற தளிரோ அன்றி என் ஆத்மாவை நலிகின்ற காதுகளோ என்றும் சுக்லபக்ஷ அஷ்டமி சந்திரனோ அல்லது ஆசைப்பட்டார்க்கு நச்சாயிருக்கிற இலையோ இவன் நெற்றி என்றும் பலவிதமாகக் கண்ணனுடைய அவயவங்கள் தங்கள் அழகும் ஆகர்ஷகமும் இருந்துகொண்டே தன்னைத் துன்புறுத்து கின்றன என்கிறார்.

**தடை நில்லாதே**

கீழில் திருவாய்மொழி ப்ராபகப்ரதானம். வணங்குமாறறியேன் என்று தன்னிடம் ஸாதனானுஷ்டானம் பண்ண யோக்யதையில்லை என்றும் யானும் நீ தானேயாவதோ மெய்யே என்று அவனிடம் தன் பாரத்தைவைத்ததைச் சொல்லி அவனே ப்ராபகன் என்று நிச்சயித்தார். அப்படியிருக்க அவன் தன்னை ஸ்வீகரிக்காத காரணம் தன்னிடம் உள்ள குறையாகத்தானிருக்க வேணுமென்றும் தனக்கு ஸம்ஸாரத்தில் ருசியில்லை என்பதை அவனுக்கு அறிவிக்க வேணுமென்று ப்ராப்யவிரோதிகளிலும் ப்ராபகவிரோதிகளிலும் தனக்கு ருசியில்லாமையை அறிவிக்கிறார். தன் அபிமதம் பெறத் தன்னிடம் தடையில்லை என்பதை இத்திருவாய்மொழியில் தோழிமார்களிடமும் மற்றையோர்களிடமும் தனக்கு நசையில்லை என்று அறிவிக்கிறார்.

மாலரிகேசவன் நாரணன் சீமாதவன்
கோவிந்தன் வைகுந்த னென்றென்று
ஓலமிட என்னைப்பண்ணிவிட்டிட்டு
ஒன்றும் உருவும் சுவடும் காட்டான்

ஏலமலர்க்குழலன்னைமீர்காள்
என்னுடைத் தோழியர்காள் என்செய்கேன்
காலம் பலசென்றும் காண்பதாணை
உங்களோடு எங்களிடையில்லையே (8.2.7)

ஆச்ரிதரிடம் வ்யாமோகமுடையவன் சத்ருநிரஸனசீலன் அழகிய முடியையுடையவன் ஆச்ரிதரிடம் வாத்ஸல்யமுடையவன் பிராட்டிக்கு அபிமானவன் ஆச்ரிதர்க்குக் கையாளா இருப்பவன் வைகுண்ட நாதன் என்று இடைவிடாது இப்படிச் சொல்லி கூப்பிடும்படி பண்ணினான் ஆனால் தன் வடிவையும் காட்டமாட்டான். தன் இருப்பிடத்துக்கு ஒரு அடையாளம் காட்டமாட்டான். நான் இப்படி பாடு பட உங்களிடம் எந்த மாறுதலும் காணவில்லை. எத்தனைகாலம் சென்றாலும் அவனைக் காணாமல் மீளமாட்டேன். உங்களுக்கும் எனக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை என்கிறாள். பின்னும் அவன் பந்துக்கள் வளர்த்தபிராணிகள் இவற்றிலெல்லாம் கொண்ட பாசத்தை அடியோடு விட்டாலன்றி அவன் தன்னைக் காட்டான் என்று கடையறப்பாசங்கள் விட்ட பின்னையன்றி அவன் அவைகாண் கொடான் என்றும் சொல்கிறாள். நீ இப்படி செய்வது சரியல்ல. நாங்கள் சொல்வதைக் கேள் என்று அன்னையரும் தோழியரும் சொல்ல நீங்கள் சொல்வதை கேட்பதற்கு நெஞ்சு வேண்டுமே என்கிறார்.

என்னுடை நன்னுதல் நங்கைமீர்காள்
யானினிச் செய்வதென் என் நெஞ்சு என்னை
நின்னுடையேனல்லேனென்று நீங்கி
நேமியும் சங்கும் இருகைக்கொண்டு
பன்னெடுஞ்சூழ் ஞாயிற்றொடு
பால்மதியேந்தி ஓர்கோல நீல
நன்நெடுங்குன்றம் வருவதொப்பான்
நாள்மலர்ப் பாதமடைந் ததுவே
(8.2.10)

நான் என்ன செய்வேன் என் நெஞ்சு நான் உன்னுடையவனல்ல என்று என்னை விட்டுப்போய் சங்கும் சக்கரமும் ஏந்தி ஒரு பெரிய

மலை வருவது போல் காண்கிற எம்பெருமானின் செவ்விதான திருவடிகளை அடைந்தது என்கிறாள்.

**ப்ரவேசம் (?)**

பகவதனுபவம் கிடைக்கப்பெறாத பராங்குச நாயகி அவனுக்குப் போலியான லௌகிக பதார்த்தங்களைக் கண்டு தரிப்போம் என்று நினைக்க அவை பிறகு எம் பெருமானையே நினைவு படுத்தி பாதகமாக முடிகிறது.

இருந்த இடத்தில் தரிக்கமாட்டாமல் இவள் நந்தவனத்திற்குப்போக அங்குள்ள மயில் குயில் முதலியவை அவனுடைய பேச்சுக்கும் வடிவிற்கும் ஸ்மாரகமாக இவரை நலிய, இவள் நினைக்கிறாள், அவளோடு கலந்து பிரிந்த எம்பெருமான் இவளை முடிக்க வேண்டும் என்று எண்ணி அவனுக்கு ஸ்மாரகமானவற்றைக் காட்டி இவளை முடிப்போம் என்று அவற்றை வரவிட்டிருக்கிறான் என்று அந்த மயில் குயில் முதலியவற்றுக்கு அவை அவனை நினைவு படுத்தியதால் அவன் குணஜ்ஞானத்தாலே வருந்துகிறார்.

இன்னுயிர்ச் சேவலும் நீரும் கூவிக்கொண்டு இங்கெத்தனை
என்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள்
என்னுயிர்க்கண்ணபிரானை நீர் வரக்கூவுகிலீர்
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுமோ

(9.5.1)

குயிற்படைகாள் நீங்கள் உங்கள் ஆண்குயில்களுடன் ஒருவருக்கொருவர் அழைத்துக்கொண்டு என்பிராணனை வருத்திக்கொண்டு என் அருகில் இப்படி ஸம்ஶ்லேஷார்த்தமாக சப்தம் செய்யாதீர்கள். எனக்கு உயிரான கண்ணன் என்கிற உபகாரகனை இங்கு வரும்படி அழைக்க மாட்டீர்கள். என் ப்ராணனை அபகரித்து அவனிடம் கொடுக்க இவ்வளவு ப்ரயத்தனம் வேண்டுமோ? என்றும் உங்கள் பேச்சு என் உயிருக்கு யமனாக இருக்கிறது என்றும் பலவிதமாக வருந்திப் பிறகு

எழநண்ணி நாமும்நம்வானநாடனோடொன்றினோம்
பழனநன்னாரைக்குழங்கள்காள் பயின்றெனினி

இழைநல்ல வாக்கையும் பையவேபுயக்கற்றது
தழை நல்லவின்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே

(9.5.10.)

நானும் போக நிசசயித்து என் பரமபத நாதனோடே ஹ்ருதயத்தினால் ஒன்றிப்போனேன். நல்ல நீர்வளமுடைய நிலத்திலே உள்ள நாரைக் கூட்டஙகளே இனி உங்கள் ப்ரயத்தனத்திற்கு என்ன பிரயோசனம் உண்டு? அவனுக்கு ஆபரணம் போலே உள்ள என் சரீரமும் மெல்ல போய்க் கொண்டிருக்கிறது. இந்த ஈசுவரனுடைய விபூதி ஸம்ருத்தமாக வேணும் என்கிறார். தாம் தாம் முடிய நினைப்பார் நாடு வாழ்க என்பாரைப் போல சொல்லுகிறாள் என்று ஆளவந்தாரும், பட்ட பாடு நாடு படாதொழிய வேணும் என்று எம்பெருமானாரும் நிர்வகிப்பார்கள். நான்முடிய, என் ஆர்த்தி காணாமல் லோகமெல்லாம் பிழைக்கும் என்று பட்டர் நிர்வாகம்

**மாலைப்பூசல்**

समा दादश तत्राहं என்கிறபடியே ஸீதாப்பிராட்டி பனிரெண்டு ஆண்டுகள் அயோத்தியில் எல்லா ஸுகங்களையும் அனுபவித்தாள். அயோத்தியை விட்டு வனவாஸத்தில் வந்தபோதும் தனிமையில் நாதனுடன் இன்பமாகவே கழித்தாள். பிறகு பிரிவுத் துயர் ஏற்படும்படியாக ராவணன் ஸீதையை கவர்ந்து சென்றான்

कान्तारमध्ये विजने विसृष्टा बालेव कन्या विललाप सीता என்று காட்டில் தனிமையில் விடப்பட்டவள்போல் பிராட்டி அழுதாள் அதைப்போலே ஆழ்வார்க்கு திருநாவாயிலே சென்று அனுபவிக்க மனோரதித்தவருக்கு பாதக பதார்ததங்களுக்கு பயப்பட்டு கூப்பிடும்படியாக ஆயிற்று கீழ்த்திருவாய்மொழியில் ப்ராப்ய வஸ்துவை பெற மனோரதித்தார். ஆனால் அது கிடையாமல் திருவாய்ப்பாடியிலுள்ளார் கண்ணனைப் பிரிந்த ஒரு ராத்திரி பட்ட வ்யஸனத்தை இவர் ஒருத்தரே படுகிறார் என்று ஆளவந்தார் நிர்வாகமாக திருமாலையாண்டான் சொல்ல, எம்பெருமானார் முன்பே ஆற்றாமையால் தளர்ச்சி அடைந்தவராகையாலே

அவ்வளவு வ்யஸனம் அனுபவிக்க ஆழ்வாருக்கு சக்திபோராது பெண்கள் கண்ணனைப் பிரிந்து ஒரு ஸந்த்யையில் பெற்ற துக்கத்தை இவர் ஒருவரே படுகிறார் என்றார். முதலிலேயே ஸம்ஸாரத்தை அறுத்துத் தர ப்ரார்த்தித்த போதும் ப்ரபந்தம் தலைக்காட்ட வேணுமென்று எம்பெருமான் அப்படி செய்யவில்லை.

பெண்கள் கண்ணன் பசு மேய்க்கப் போனால் அவன் திரும்பிவரும் மாலைப் பொழுதை எதிர்நோக்கி ஒருவாறு தேறியிருப்பார்கள். பிறகு முதல் பசுக்கூட்டம் வரும்போது அவனைக் காணடவிட்டால் அவர்களுக்கு ஆற்றாமை மிக ஏற்படும். கண்ணனும் எல்லாப்பசுக்களுக்கும் பின்னால் வருவான். அந்த இடைப்பட்ட காலத்தில் மல்லிகையின் மணம் கூட்டிய தென்றல் இனிய இசை நிலா அன்றில், குழலோசை முதலிய அனுகூல பதார்த்தங்கள், பாதகமாகத் தோன்றிற்று. அசோகவனத்தில் எல்லா ராக்ஷஸிகளும் பிராட்டியை மிக துக்கப்படுத்த நினைத்தாற்போல் இந்த பதார்த்தங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இவரைத் துன்புறுத்த, அவர்கள் எல்லோரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவர் கூப்பிடுகிறார்.

மாலையும் வந்தது மாயன்வாரான்
மாமணி புலம்ப வல்லேறணைந்த
கோல நன்னாகுகளுகளுமாலொ
கொடியன குழல்களும் குமுறுமாலோ
வாலொளி வளர்முல்லைக்கருமுகைகள்
மல்லிகையலம்பி வண்டாலுமாலோ
வேலையும் விசும்பில் விண்டலறுமாலோ
என்சொல்லியுய்வன் இங்கவனை விட்டே (9.9.10)

மாலை வந்து விட்டது. ஆனால் கண்ணன் வரவில்லை. கழுத்தில் கட்டிய மணிகள் சப்திக்க இளம் பசுக்களுடன் கூடிய யானைகள் வந்தன. பசுக்கள் ஆனந்தத்தால் குழறுகின்றன. சிறந்த ஒளிபொருந்திய மல்லிகை முல்லைக்கொடிகள் இவற்றில் ஆழ்ந்து வண்டுகள் முரலுகின்றன. கடலலைகள் உயர்ந்து வானத்தை எட்டும்படி இருக்கின்றன. இங்கு அவன் இல்லாமல் என்ன சொல்லி நான் உஜ்ஜீவிப்பேன்.

அவனைவிட்டகன்று யிராற்றகில்லா
அணியிழையாய்ச்சியர் மாலைப்பூசல்
அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி
அணிகுருகூர் சடகோபன் மாறன்
அவனியுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த
ஆயிரத்துள் இவை பத்துங்கொண்டு
அவனியுளலற்றி நின்றுய்ம்மின்
தொண்டீர் அச்சொன்னமாலை நண்ணித் தொழுதே (9.9.11)

*எம்பெருமானைப் பிரிந்து தரிக்கமுடியாமல் ஆய்ச்சியர்கள் அவள் வரவு தாழ்த்த ஸந்த்யாகலத்தில் கூப்பிட்ட மாலைப் பூசலான பாசுரத்தை ஆழ்வார் அருளிச் செய்த ஆயிரம் பாசுரங்களில் இத்திருவாய் மொழி அவனிடம் ப்ரீதியுடையார் அநுஸந்தித்து உஜ்ஜீவியுங்கள் என்கிறார்.*

**காலைப்பூசல்**

*கீழே 2ந் திருவாய்மொழியில் திருவனந்தபுரத்தில் தாமும் ஸ்ரீ வைஷ்ணவர்களுமாய் அடிமை செய்ய வேண்டுமென்று பாரித்து அது முடியாமல் போக ஆழ்வார் தமக்கு பிறந்த துக்கத்தை ஒரு பிராட்டி பாசுரத்தாலே அருளிச் செய்கிறார். நெடுநாள் கலந்து பிரிந்த ஒரு பிராட்டியாய் க்ருஷ்ணன் இவளை முன்பு பிரிந்த ஒரு அதிகாலையை நினைவில் கொள்ளுகிறாள். அந்தக் காலத்துக்கு அடையாளமான காற்று வீசுகையும் குயில்கள் கூவுதலும் மயில்கள் நர்த்தனமிடுகையும் பசுக்கள் மேயக்கிளம்பியதையும் நினத்து பசுக்களை ரக்ஷிப்பதை அவன் விடமாட்டான் என்று அவன் இப்போது கூட இருந்தும் அவன் போவான் என்று நிச்சயித்து நீ பசு மேய்க்கப் போகாதே என்கிறார்.*

வேய்மரு தோளிணை மெலியுமாலோ
மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா
காமருகுயில்களும் கூவுமாலோ கணமயிலவை கலந்தாலு
மாலோ
ஆமருவினநிரைமேய்க்கநீபோக்கு
ஒரு பகலாயிரமுழியாலோ

தாமரைக் கண்கள் கொணடீர்தியாலோ
தகவிலை தகவிலையே நீ கண்ணா

(10.3.1)

நீ பிரியப்போகிறாய் என்று நினைவாலே குயில் முதலியவற்றாலே ஈடுபடுகிற என்னை உன் கண்ணழகால் நலிகிறாய். மூங்கிலை யொத்த தோள்களிரண்டும் மெலிகின்றன என் உடலின் மெலிமையும் என் தனிமையையும் நினைக்காமல் குயில்கள் தம்மில் தாம் சேர்வோமென்று கூவுகின்றன. மயில்கள் கலந்து நர்த்தனமாடுகின்றன. பசுக்களை மேய்ப்பதற்காக நீ போகிற ஒரு பகல் ஆயிரம் ஊழிக்காலம் போல நீள்கின்றது. நீயும் உன் கண்களைக் கொண்டு என்னை வருத்துகிறாய் ஸ்த்ரீகளை வருத்தக்கூடாது என்ற ஸாமான்ய க்ருபையும் உன்னிடம் இல்லை. முன்னமே வருந்தியிருப்பாரை நலிவது தகாதென்ற விசேஷ க்ருபையும் இல்லை என்கிறார்.

தகவிலை தகவிலையே நீ கண்ணா
    தடமுலை புணர்தொறும் புணர்ச்சிக்காரா
சுகவெள்ளம் விசும்பிறந்து அறிவை மூழ்க்கச்
    சூழ்ந்து அதுகனவென நீங்கியாங்கே
அகவுயிரகமகந்தோறும் உள்புக்கு
    ஆவியின் பரமல்ல வேட்கை அந்தோ
மிக மிக இனி உன்னைப் பிரிவையாமால்
    வீவ நின் பசு நிரைமேய்க்கப்போக்கே

(10.3.2)

நீ செய்வது தகாது. நீ என்னோடு கலக்கும்போது அதற்கு அடங்காத சுகவெள்ளம் ஆகாயத்திற்கும் அப்பால்போய் அறிவும் அழுந்தும்படியாக சூழ்ந்து அது ஸ்வப்னம் போல ஆக, என் ஆத்மாவும் பொறுக்கமுடியாதபடி உன் பிரிவை நாங்கள் அடையாத படி நீ பசுநிரைமேய்க்கப்போவதை தவிர்க்கவேணும்.

மேலும், உன் செங்கமலவண்ணமென்மலரடி நோவ நீ போய் ஆமகிழ்ந்துகந்தவை மேய்க்கின்று உன்னோடசுரர்கள் தலைப் பெய்யிலவன்கொல் ஆங்கே *(10.3.7)*.

அவத்தங்கள் விளையும் என்சொற்கொளந்தோ
அசுரர்கள் வன்கையர் கஞ்சனேவ
தவத்தவர்மறுக நின்று உழிதருவர்
தனிமையும் பெரிது உனக்கு இராமனையும்
உவர்த்தலையுடன் திரிகிலையும் என்றென்று
ஊடுற என்னுடைய ஆவி வேமால்
திவத்திலும் பசுநிரை மேய்பபு உவத்தி
செங்கனி வாயெங்களாயர்தேவே

(10.3.10)

எங்கள் சொல்லைக்கேள். கம்சன் ஏவிய அசுரர்கள் வருவர். ஆபத்து ஏற்படும் தவமுனிவர்கள் ரக்ஷணத்திற்கு தீக்ஷிதனான நீ அவர்கள் கலக்கமடைவதையும் எண்ணிப்பார். பலராமனும் உடனில்லாமல் எங்கும் திரிகிறாய். இவற்றை எண்ணி என் ஆவி வேகின்றது. பரமபதத்திலிருப்பவைவிட நீ பசு மேய்ப்பதில் அதிக உகப்படை கிறாய் என்று முடிக்கிறாள்.

ஆக இப்படி 27 திருவாய்மொழிகளில் ஆழ்வார்தோழியாக தாயாக தலைமகளாகத்தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார்.

இவ்வளவு சிறப்புகள் கொண்ட ஆசாரிய ஹ்ருதயத்திற்கு விசதவாக் சிகாமணிகளான மணவாள மாமுனிகளின் வியாக் கியானம் மூல நூலின் காம்பீர்யம் குறையாமல் அருளியிருக்கிறார். அருளிச் செயலின் ஆழ்ந்த கருத்துக்களைத் தெளிவாக அறிய விரும்பு வர்களுக்கு ஆசார்யஹ்ருதமும் மாமுனிகள் வியாக்கியானமும் இன்றியமையாதனவாகும்.

ஆசார்ய ஹ்ருதயத்தைத் தவிர "அருளிச்செயல் ரஹஸ்யம்" என்னும் மற்றொரு நூலின் மூலம் ரஹஸ்யத்ரயம் என்று சொல்லப்படும் திருமந்திரம் சாம சுலோகம், த்வயம் இவற்றையே அருளிச்செயல் சொல்லுவதாகக் காட்டுகிறார். நாயனார் திருப் பாவைக்கும் ஒரு சிறந்த வியாக்கியானம் அருளிச்செய்திருக்கிறார்.